


புகழும் பாம்பாட்டிச் சித்தர் வரலாறு

சங்கரன்கோவில்



பாம்பாட்டிச் சித்தர்






பார்புகழும் பாம்பாட்டிச் சித்தர் வரலாறு

சங்கரன் கோவில்

Serpent (PAAMBATTI) Siddha awakoned the Kundalini Serpent Power and attained Soruba Samadhi in Sankaranarayana koil.



பாம்பாட்டிச் சித்தர் சங்கரநாராயணன் கோவிலில் சொரூப சமாதி எய்த குண்டலினி நாக பாம்பைத் தட்டி எழுப்பினர்.

1. நூலின் பெயர் :-
பார்புகழும் பாம்பாட்டிச் சித்தர் வரலாறு

2. நூல் தொகுப்பு - திரு.ராமானுஜம் சுவாமிகள்

3. வெளியீடு :-
ஸ்ரீ பாம்பாட்டிச்சித்தர் சேவா சமாஜ் (S.P.S.S.S.)
27-அ, வடக்கு சித்திரை வீதி, மதுரை.

4. வெளியீடு எண் - 1

5. பிரதிகள் - 3000

6. பதிப்பு - முதற்பதிப்பு 1996 ஜூலை


7. பதிப்புரிமை - தலைவர்,
ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர் சேவா சமாஜ் - மதுரை.

8. விலை - ரூ. 37.00

9. புத்தகம் கிடைக்குமிடம் -
27-அ, வடக்குசித்திரை வீதி, மதுரை,
15-புளியங்குடி ரோடு, சங்கரன் கோவில்
போன் - 23131 STD எண்-04636.


10. நூல் அளவு (சைஸ்) - 1x8 கிரவுன் சைஸ்

Typeset by : வாசன் கம்ப்யூட்டர் கன்சல்டன்ஸி,
மதுரை-625 009. Ph : 624279



பிரம்ம ஸ்ரீ சித்தராஜ சுவாமிகள்
ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் சமாதி
பீடத்தின் நிர்வாகி

குரு பதம் பணிந்து போற்றும்
பிரம்ம ஸ்ரீசித்தராஜ சுவாமிகளின் சீடர்
இராமானுஜம் சுவாமிகள்



பாம்பாட்டிச் சித்தர் சமாதி பீடத்தின்
துணை நிர்வாகி



அருள்மிகு பாம்பாட்டிச் சித்தர் சமாதி பீடத்தின் எழில்மிகு தோற்றம்

பரப்பிரம்ம சிலையின் தோற்றம்



கிழக்கில் மகா விஷ்ணு

பரப்பிரம்ம சிலையின்

தத்துவம் 72ம் பக்கம்



தெற்கில் சிவனும் சக்தியும்

பரப்பிரம்ம சிலையின் தொடர்ச்சி . . . .



யர்



வடக்கில் வல்லப கணபதி



ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர் பிரதிஷ்டை
செய்த அருள்மிகு ஸ்ரீ கோமதியம்மன்

பார்புகழும் பாம்பாட்டிச் சித்தர் வரலாறு

பொருளடக்கம்

டாக்டர் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்

இணைப்பேராசிரியர்
நாட்டுப்புறக் கலை மையம்
மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை-21.

அணிந்துரை

சித்தர் பாடல்கள் எனச் சித்தர் பாடல்களைத் தொகுத்துத்தரும் பல நூல்கள் வெளியாகியுள்ளன. தனியே ஒவ்வொரு சித்தருடைய மெய்யான வாழ்க்கை வரலாற்றையும் அவர்கள் ஒளியூட்டிய ஞானப் பாதையையும் உலகிற்குத் தெளிவுபடுத்தும் நூல்கள் இது காறும் எழுந்தில.

பாம்பாட்டிச் சித்தரின் வரலாற்றை மிகவும் முயன்று தொகுத்தளித்துள்ள இந்நூலினை உளமாரப் போற்றுகிறேன். ஏமமென்றும் சாமமென்றும் பாராது, இடையறாது, பாம்பாட்டிச் சித்தரையும் பிரபாகர சுவாமிகளையும் நெஞ்சில் போற்றும் சித்தராஜ சுவாமிகளையும் இந்நூல் உருவாகக் காரணமாக இருந்த அவர்தம் பெருங் கருணையையும் வணங்குகிறேன். நூலாக்கம் புரிந்துள்ள இராமானுஜம் சாமிகளையும் பாராட்டுகிறேன்.

இவ்வண்ணமாகவே பிற சித்தர்களது வாழ்க்கை வரலாறும் அவர்கள் காட்டிய

மெய்ந்நெறியும் விளக்கமுறுத்தப்பட்டு, அவர்தம் பாடல்களின் உட்பொருளும் வெளிப்படுத்தப்பட்டு, அவர் தம் ஜீவ சமாதிகளும் உலகிற்கு உணர்த்தப் பட்டால், கல்வியறிவாகிய எண்ணெய்யும் அனுபவம் என்ற திரியும் கொண்ட எத்துணை ஜீவான்ம விளக்குகள் சுடர் ஏற்றப் பெறும்! என்று உள்மனத்தில் ஏங்குகிறேன்.

நூலாசிரியர், 'சித்தர் யார்' என்பதற்குக் கூறும் விளக்கம் அற்புதமானது. 'பக்தி எனும் பெருங்கடலில் மூழ்கி....ஜீவனுக்குள் சிவனைக் கண்டவர் சித்தர்' என்கிறார்.

"*பண்ணரிய தவப் பயன் பக்தி இல்லையேல்*
பாழ்படும் என்று துணிந்தாடு பாம்பே"

என்ற சித்தரது கோட்பாட்டுக்கு முரண்படாத இவ்விளக்கம் சாலப் பொருந்தும்.

இருப்பினும், சூனியத்தைக் காட்டுதல், அக்னியில் மூழ்குதல், மூசடக்கிக் கடலுக்கடியில் உயிர் வாழ்தல், அறுபத்தைந்தாவது கலையை அறிதல், புலி, யாளி, சிங்கங்களைக் குற்றேவல் கொள்ளல் முதலிய சித்தர் வல்லபங்கள் சாதாரண மானுடரை மருட்டச் செய்யப்பட்ட வித்தைகள் அல்ல; நிரம்பிய குடம் பொங்கி வழிதல் போலச் சித்து என்னும் மேகம் சிந்தும் விளையாட்டுச் சாரல் மழை.

குண்டலினி சக்தியைப் பாம்பென்று உருவகிப்பதுண்டு. அப்பாம்பினைக் கட்டி ஆண்ட மையால் பாம்பாட்டி என்றும், ஐம்பூதங்களையும்

ஐந்தலை நாகமாக அடக்கியாண்டதால், 'பாம்பாட்டி என்றும் சித்தர் பெயருக்கு விளக்கம் கூறப் படுகிறது. ஐம்பொறிகளோடு தொடக்குண்ட ஐம்புலன்களும் ஐந்தலை நாகமாய்ச் சேமக் குடை பிடித்தால் நம் சித்தமும் அச்சமின்றித் தூங்காமல் தூங்கும் அறிதுயில் கொள்ளும்.

வாஸ்து சாஸ்திரத்தில் எனக்கு ஆர்வ முண்டு. வாஸ்துவானது தென்மேற்கே கன்னி மூலையில் ராகு ஸ்தானத்தில் பாதமிரண்டும் ஒன்றாக்கி ஆசனமிட்டு, வருண திசையிலும் யம சிதையிலுமாக முழங்கால்கள் நீட்டி மடக்கி, விஷ்ணு ஸ்தானத்தில் நாபியை நிறுத்தி, வாயுவிலும் அக்கினியிலுமாக முழங்கை மடக்கிக் குபேர திசையிலும் இந்திர திசையிலும் இடவல புஜங்கள் தூக்கிக் குருவாகிய ஈசானியத்தில் தலை வைத்து மண்டலமிட்டுள்ளது என்று அறிய நேர்ந்தபோது குண்டலியின் தத்துவத்திற்கும் இதற்கும் இடையே உள்ள ஒற்றுமையை அறிந்து வியந்தேன்.

சித்தர்களின் பாடல்கள் பலவும் உட்பொருள் உடையனவாய் உள்ளன. மேலிடு சொற்கள் அன்றாட வழக்கியல் போர்வை போர்த் தியிருப்பினும் உள்ளிடு பொருளோ தோலுக்கும் சுளைக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லாத பலாக்கனி போல் சிரமத்தின்பேரில் கண்டறிய வேண்டியுள்ளது. ஒருமுறை, என் கணவரும், யானும் புகை வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது ஒரு முதியவர் ஒரு புதிர்

விடுத்தார். 'உலர்ந்த கிளையுள் மலர்ந்த பூ என்ன பூ?' என்றார். நாங்கள் பலவிதமாகச் சிந்தித் தறியமுயன்றோம். பலரிடமும் வினாவினோம். கிராம்பூ என்றார். ஒருவர், 'ஏழையின் புன் சிரிப்பு' என்றார் மற்றொருவர், 'விறகுக் கட்டை' தான் உலர்ந்த கிளை, அதில் எரியும் நெருப்பு தான் பூ என்றார் வேறொருவர்; 'கருவுற்றிருக்கிற ஒரு மனைவி கணவனை இழந்து விதவையாகிறாள். வயிற்றில் சுமக்கும் கருவிற்காக உயிர் வாழ்ந்து அவள் ஈன்றெடுக்கும் குழந்தை உலர்ந்த கிளையில் மலர்ந்த பூ' என்று உருக்கமாக விளக்கினார் இன்னொருவர். இதுகாறும் விடை கண்டறிய இயலவில்லை. பாம்பாட்டிச் சித்தரின் பாடல்களை ஊன்றிப் படித்த பின் 'முதுகின் வழியாக ஏறி மேலே பூக்கும் ஆயிரத் தெட்டிதழ்த் தாமரையாகும் சக்தியைக் குறிப்பதோ இப்புதிர்'? என்று தோன்றுகிறது.

'ஆதார முதலிலே பாம்பதாக' போலும் பாடல்கள் குருஉபதேசத்தின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டிய சூட்சும அட்சர விளக்கங்கள்.

ஆனால், சித்தர் பாடல்கள் என்றதுமே 'அர்த்தம் புரியாதவை' என்று கூறிவிட இயலாது. சித்தர் பாடல்கள் பலவும் பாமர மக்களிடையே இன்றும் இசையோடு பாடப்பட்டு வருகின்றன. அதற்குக் காரணம், சித்தர் பாடல்களிலே எளிமையும், புரியும் படியான உவமைகளும் இடம் பெற்றிருப்பதுதான். ஒவ்வொருயிரிலும் ஈசன் உறைகிறார். எப்படி? மன்னிப் பொருந்தி

உறைகிறார். எதைப்போல்? பொன்னில் ஒளி புலப்படுவது போல் வெளிப்படையாகவும், பூவுக்குள் மணம் போல் சூட்சுமமாகவும், எள்ளில் எண்ணெய் போல் உட்கலைவயாகவும் உறைகிறார் என்பது பாம்பாட்டிச் சித்தர் காட்டும் உவமை. 'புளியம் பழமும் தோடும் போல' சொந்தங் களினின்று விலகி நிற்றல், போர்க்களத்தில் ஊசி தேடுவது போல் வாதிகளின் மத்தியில் முக்தி தேடுவது. மீனைப் பலமுறை நீரில் கழுவினாலும் நாற்றம் போகாமை போல உடம்பைப் பல நதிகளில் நீராட்டினாலும் உடம்பின் குற்றம் போகாது. என்னும் உவமைகள் எத்துணை எளியவை!.

பாம்பாட்டிச் சித்தர் ஒருவகையில் கிராமியப் பாட்டுக்காரரும்கூட. ஏனெனில் பிடாரன் பாட்டுப் பண்ணில் தமது தத்துவங்களை இசைப் பாடல்களாகப் படைத்துள்ளார்.

கிழக்கு வங்காளத்தில் பாலர்கள் (Bauls) எனப்படும் வீதிப் பாடகர்கள் கையில் துந்தனாவை மீட்டிக் கொண்டு அரிய தத்துவங்களை அழகிய இசை வடிவில் எளிமையாகப் பாடி செல்வதை இன்றும் காணலாம். ஆனால் சித்தர்களின் மெய்யுணர்வுப் பாடல்களோ அனுபவ முதிர் கனிகள். இவற்றுக்கிணையான பாடல்கள் எங்கும் உளவா என்பது ஐயமே.

பாம்பாட்டிச் சித்தர் 'கன்னான் குகையிலே கான் மறிப்போம்' என்று பொன் வேலையையும்,

'கருமான் உலையிலே தீயை மூட்டுவோம்' என்று இரும்பு வேலையையும், 'வடக்கும் கிழக்குமாக நூலை இழைப்போம் மற்றும் சுழலிலே பாவு பூட்டுவோம்' என்று நெசவு வேலையையும், 'ஊத்தைக் குழி மண்ணில் உதிரப்புனல் சேர்த்து வாய்த்த குயவனார் பாண்டம் வறையோட்டுக்கும் ஆகாது' என்று குலாலர் தொழிலையும், 'ஒன்பது வாசல் கொண்ட துருத்தி', என்று தோல் தொழிலையும் மண் பாவையைச் சீவன் என்னும் சூத்திரத்தால் திரைக்குப் பின்னிருந்து ஒருவன் அசைக்கின்றான் என்று பாவைக் கூத்தினையும் உவமைகளாக ஆக்கியிருப்பது கிராமியத் தொழில் நுட்ப உத்திகள் மூலமாகச் சித்தர் அரிய தத்துவங் களை உணர்த்தியுள்ளமையைக் காட்டுகிறது. எல்லாச் சமுகத்தவர்களது தொழில்களையும் மேற் காட்டியிருப்பது. 'சாதிபேதங்கள் சகத்தோர்க்கே அல்லாது சற் சாதுக்களுக்கோ' என்ற அவரது பாட்டுக்கே மெய்ப்பிப்பாக உள்ளது.

மானுடச் சமூகத்தின் மீது மாக்கருணை கொண்டவர் தாம் இப்படிப் பாடமுடியும் அத்தகைய சித்தரின் சரித்திரத்தை எத்தகைய ஈடுபாடிருந்தால் எழுத இயலும்? கிருஷ்ணபிரான் குழலிசைத்த போது சூழநின்று, மெய்மறந்து, தின்றபுல் வாயினின்றும் சோர, செவியாட்டுகையும் அயர்ந்து தாமே இசையாய் உருகிய ஆவினம் போன்ற மனநிலை வேண்டும்.

பாம்பாட்டிச் சித்தர் அவதரித்த கோசாயி வம்சத்தார் வாழ்ந்த இமயமலைப் பகுதியை

இந்நூலாசிரியர் வருணிக்கும் போது, ஆயிரமாண்டு கட்கு முன்னே வாழ்ந்த சித்தர் பெருமான்களோடு அந்த இமய மலையிலே நாமும் மானாக மயிலாக வாழ்ந்திருந்தோமோ என்னும் பூர்வ ஜென் மங்களின் ஓர்மிப்பு நம் சித்தத்தில் விழித் தெழுகிறது.

இந்நூலில் பாம்பாட்டிச் சித்தருக்காகப் படைக்கப்பட்டுள்ள அஷ்டோத்தரமும் போற்றியும் அருமை. பிரபாகரதாசன் இயற்றியுள்ள சித்தர் தாலாட்டோ' அதனினும் இனிமை. பதினெட்டுச் சித்தர்கள் சமாதியான இடங்களைச் சுட்டும் பூலித்தேவர் ஓலைச்சுவடி பயனுள்ளது. நாம் அன்றாட வழிபாட்டில் இப்பாடலைச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஸ்ரீசட்டைமுனி, அவர்தம் சீடர் ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர், அவர்தம் சீடர் ஸ்ரீபிரபாகர சுவாமிகள், அவர்தம் சீடர் ஸ்ரீசித்தராஜ சுவாமிகள் என்று சித்தர் பரம்பரை தொடர்வது பூவுலகில் புண்ணியம் நிலைநாட்டும். அதனினும், பாம்பாட்டிச் சித்தரின் ஜீவ சமாதியில் கோயில் கட்ட முனைந்துள்ளமை சித்த பக்தர்களின் உள்ளத்தில் பரவச ஊற்றாகி அகமும் புறமும் ஆனந்தப் பெருக்காகும்.

சங்கர நாராயணார் கோயிலிலே இந்த ஆயிரத்தெட்டிதழ் வீட்டில் அமரும் பாம்பாட்டிச் சித்தர் அண்டமெலாம் நிறையும் அற்புத சித்தராக, காயமிலாது ஓங்கி வளர் காரண சித்தராக,

சமாதிக்குள் ஜீவ ஒளியாக நிலைப்பதுடன் நம் விழிகளிலும் சித்தத்திலும் ஒளியாகத் திகழ்ந்தருள வேண்டும்.

இவ் அற்புதமான அரிய முயற்சியை மேற் கொண்டுள்ள ஸ்ரீசித்த ராஜசுவாமிகளும் அவருக்கு உறுதுணை புரியும் அடியவரும் ஏழு கடல்களைத் தெப்பமாகக் கட்டி, எட்டு மலைகள் பந்தாடி வந்து கால் கோள் செய்து, வானத்தை வில்லாக்கி விதானமாக்கித் துரும்பைத் தூணாக நிறுத்தி நாற்பத்து முக்கோண நிலையில் நடுவதாக நாயகனை நாட்டி வேதன் சிருஷ்டி போல் விந்தையானதொரு கோயில் சிருஷ்டித்து 'இன்னும் என்ன செய்வம் சித்தனாரே' என்று சித்தப் பிடாரனார் சந்நிதியில். சிம்ம நடைக்கூத்து ஆடவிருக்கிறார்கள்.

இந்நூலாசிரியர் இந்நூலையாக்கி அருள் தொண்டு புரிந்துள்ளார். இந்நூலுக்கு நாம் ஆதரவுக்கரம் நீட்டுவதோடு மட்டுமின்றி இத் திருக்கோயில் கட்டும் முயற்சியில் நமது பொருள் தொண்டும் இணைய வேண்டும்.

சத்தியமாய் எங்கள் கடந்தான் அழியாதே என்று சித்தர் பாடியது போல் சத்தியமாய்ச் சித்தர் நெறி சலிப்புறாது, நிற்கும், நிலைக்கும், நிலமிசை ஆண்டிடும்.

வளர்க சித்தர் கோயில் !

வாழ்க சித்தர் வழிபாடு !

ஓங்குக சித்தர் மருத்துவம் !

உயர்க சித்தர் பரம்பரை !

அணிந்துரை

பாம்பாட்டிச் சித்தரைப் பற்றி இந்நூல் ஆசிரியர் அனைத்து தகவல்களையும் திரட்டி இந்நூலை ஆக்கியுள்ளார். இவை தவிர வேறேதும் செய்திகள் வேறு யாரும் நமக்கு இவ்வளவு நிறைவாக, தெளிவாக தெரிவிக்க முடியாது. சீறுபாம்பை சீராக்கி, மாலையாக்கி கழுத்தில் அணிந்துள்ள சிவபெருமான் தான் பாம்பாட்டிச்சித்தர் என்றிருந்தோம். ஆனால் சிவனின் கழுத்தில் உள்ள பாம்பினை விளித்து ஆடு பாம்பே என்று பாடல்களை முடித்ததனால் இவர் பாம்பாட்டிச் சித்தர் என்று பெயர் பெற்றுள்ளார் என்றும், குண்டலிய யோகத்தால் ஐந்து தலைநாகத்தை அடக்கி, சித்துகளை செய்ததால் இப்பெயர் பெற்றார் என்றும் குண்டலிகம் என்ற நாகத்தை தன் பலத்தால் அடக்கி சித்துகள் செய்தார் என்ற காரணத்தினால், இவருக்கு இப்பெயர் ஏற்பட்டது என்றும் விரிவாக கூறியுள்ளார். பாம்பாட்டிச் சித்தரின் பிறப்பு, வளர்ப்பு, சிறப்பு இறுதியில் சமாதி நிலை அடைந்து, பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருப்பதையும், மிகவும் சிறப்பாக கூறியுள்ளார்.

சங்கர நாராயணன் கோயில் பற்றியும், பாம்பாட்டிச் சித்தரின் சமாதி இருக்கும் இடம் பற்றியும், விளக்கிச் சொல்லி புற்றுமண் சிறப்பு பற்றியும் கூறியுள்ளார். பாம்பாட்டிச் சித்தரின்

வரலாறு பற்றியும் அவர் பாடிய பாடல்கள் பற்றியும் மற்றும் பல செய்திகள் பற்றியும் இந்நூலில் படித்து பயன்பெறுவதோடு அல்லாமல் மற்றவர்களுக்கும் இதன் சிறப்பை எடுத்துக் கூறி பயன்பெற செய்ய வேண்டுமென்று இந்நுலை படிப்போரை வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம் !

இப்படிக்கு
பொறி. சோ. மணி. பி.இ., எம்.எஸ்.சி.
(பொறியியல்) எம்.ஐ.இ.
மண்டல தலைமை பொறியாளர்
மதுரை மண்டலம்
தமிழ்நாடு மின்சார வாரியம்
மதுரை.

Dr. DVP RAJA M.A., DSSA., Ph.D., D.Litt.,

Director

MADURAI INSTITUTE OF SOCIAL SCIENCES

President

SOCIETY FOR PROMOTION OF RESEARCH EDUCATION & DEVELOPMENT

President

TAMILNADU PRINCIPALS ASSOCIATION

Consultant

MINISTRY OF WELFARE, GOVT. OF INDIA

Alagarkovil Road, Madurai - 625 002.

Phone : Off : 41977 Res : 42723

பாராட்டுரை-1

பதினெட்டுச் சித்தர்களில் முதல்வர் திருமூலராகவும் ஸ்ரீபாம்பாட்டி இறுதியான சித்தராகவும் அமைந்து பார் புகழ் பெற்றனர். பொதுவாகச் சித்தர்கள் ஊனை உருக்கி, உணவைச் சுருக்கி, ஐம்பொறிகளை அடக்கி சித்து வித்தைகள் அனைத்தும் செய்யும் திறன் பெற்றிருந்தாலும் வெளிக்காட்டாமல் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராக விளங்கி - சித்த வைத்தியத்தில் நிபுணர்களாக திகழ்ந்தனர். "யாதும் ஊரே - யாவரும் கேளிர்" என்ற கொள்கையினைத் தலைமேற்கொண்டு மனித நேயத்தைப் பரப்பி மனித இனத்திற்குத் தொண்டு செய்யும் ஆண்டவனின் தொண்டர்களாகத் திகழ்ந்தனர்.

அப்படிப்பட்ட மகான்களில் ஒருவரான பாம்பாட்டிச் சித்தரது வரலாற்றைத் தொகுத்த இந்த முயற்சியினை நான் பாராட்டுகிறேன், போற்று கிறேன், பெருமிதப்படுகிறேன். இந்த . முயற்சி மேலும் பெருகிப் பெரும் நூலாக மலர ஆண்டவனை வேண்டுகிறேன்.

த.வே.பெ. ராஜா
முதல்வர்
மதுரை சமூக அறிவியற் கல்லூரி
மதுரை.

குரு வணக்கம்

நிதியே! என் உள்ள நிறைவே!
பொதுவில் நிறைந்த சிவபதியே!
அருட் பெரும் சோதியனே!
அம்பலம் விளங்கும் கதியே
என் கண்ணும் கருத்தும் களிக்கக்
கலந்து கொண்ட குண்டலியப் பாம்பாட்டி
அமுத மழையே! நின் பேரருள்
வாழிய வாழிய வாழியவே!

வாழ்த்துரை - 1

செந்தமிழ் நற்தேனாம்
தேன்பொழில் தமிழ் நாடாம்
சித்தனாம் பாம்பாட்டிச் சித்தர்
பழம்பெரும் வரலாறு தன்னை
கண்ணால் கண்டு கருத்தினில் இருத்தி
சொல்லது இனிக்க சுவையது பெருக்கி
வராகி திருவருளால் சுந்தர மயமாய்
காசினியில் பதித்த இத்திரு வேட்டை
படித்தவர் மேன்மையாகி பேரறிவோடு

பழம் பெரும் கீர்த்தி பெற்று
நிலம் தனில் நிமலனருள் பெற்று
வாழ்வர் என வாழ்த்துக் கூறி
குரு பதம் தான் பணிந்து
இக் குவலயத்தில் முடித் திட்டேனே.

நூலின் பெருமை

பக்தி வரும் பழவினைகள் பறந்தோடும்
மூல பல பகுதி மாயும்
புத்தி வரும் புழை குலைகள் புறம்போகும்
ஆனந்தம் பொங்கும் - ஞான
முக்தி தரும் அழியா நன் மோனநிலை வரும்
முது கடல் சூழ் உலகிலெல்லாம்
சித்தி தரும் பாம்பாட்டிச் சித்தர்
திருநூலை சிந்திப் போர்க்கே

அன்புடன்
திருநாதகிரி முருகனடிமை
எஸ். முத்துப் பாண்டியன்
கீழ ராஜகுல ராமன்

வாழ்த்துரை - 2

ம.சோசு தலைவர்

தமிழ்நாடு குருதிக் கொடையாளர்கள் சங்கம்

27-அ, வடக்கு சித்திரை வீதி,

மதுரை - 625 001.

பதினெண் சித்தர்களில் ஒருவரான பாம்பாட்டிச் சித்தர் குண்டலினியின் வலிமையைப் பாம்பாக உருவகப்படுத்தி மக்களின் கடைத்தேற்றத் திற்கான பாடல்களைப் பாடியதால் பாம்பாட்டிச் சித்தர் எனப்பெற்றார். அவற்றின் உண்மை வரலாற்றையுரைக்கும் காலப்பெட்டகம் இந்நூல். இந்நூலை எழுதிய திரு.ராமானுஜம் சுவாமிகள் (எ) தமிழினியன் பணி பாராட்டுக்குரியது. இப்பணிக்கு பின்புலமாக விளங்கும் தவத்திரு. சித்தராஜ அடிகளாரைத் தமிழகம் நன்கு அறியும் . அடிகளாரின் எளிமையும், அயராத உழைப்பும் எவரையும் அவர்பால் ஈர்க்கும். சாதி, சமயம், மொழியினைக் கடந்து தன்னலமற்ற பொதுத் தொண்டாற்றுகிறார். ஏழை, எளிய மக்களின் தோழராக விளங்குகிறார். நுண்ணறிவு, பகுத்தறிவு, பட்டறிவு அடிப்படையில் உடல்ப் பிணியும், உள்ளப் பிணியும் போக்கும்

கோவிலில் ஜீவ சமாதியாகியிருக்கும் குருவுக்குக் குருவான பாம்பாட்டிச் சித்தர் சமாதியில் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். கோயிலுடன் ஏழைகளுக்குப் பெருஞ்சோறு அளிக்கும் கூடம், சித்த மருத்துவமனை, மெய்நிலைப் பயிற்சி கூடம் போன்றவை கட்டப்படுகின்றன. இம்மக்கள் பணியில் பங்கு கொள்வது நமது கடமையாகும்.

வாழ்க ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர்

வாழ்க ஸ்ரீபிரபாகர சுவாமிகள்

வாழ்க தவத்திரு சித்தராஜ சுவாமிகள்

இரா. பாஸ்கரவேலு, பி.இ., எம்.ஐ.இ.,
'சேது பவனம்'
சிவகிரி.

வாழ்த்துரை - 3

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பர் பெரியோர். ஆண்டுதோறும் ஆடித்தபசு நன்னாளில் அன்னதானம் செய்து சங்கரன் கோவில் பகுதியில் ஏழை, எளிய மக்களின் வணக்கத்திற்குரிய சுவாமிகளாக வாழ்ந்து வருபவர் தவத்திரு பிரம்ம ஸ்ரீ சித்தராஜ சுவாமிகள் ஆவார். பதினெண் சித்தர்களில் ஒளி விளக்காய் திகழ்ந்து குண்டலினியின் வலிமையைப் பாம்பாக உருவகப்படுத்தி பாடல்கள் எழுதிய - மண்ணில் பிறந்து மாதவம் புரிந்து, ஐம் பொறிகளை அடக்கிய சித்தர் திலகம் பார் புகழும் பாம்பாட்டிச் சித்தரின் வாழ்க்கை வரலாற்றினை புத்தக வடிவில் வெளிவர காரணகர்த்தாவாக விளங்குபவர் சுவாமி சித்தராஜ சுவாமிகள் என்றால் அது மிகையாகாது.

அன்னாரின் கட்டளையை தலைமேற் கொண்டு அருமை நண்பர் திருராமானுஜம் சுவாமிகள் அவர்கள் அழகுத் தமிழில் எளிய நடையில் பாடலாகவும், உரை நடையாகவும் பாம்பாட்டிச் சித்தரின் வாழ்க்கை வரலாற்றினை சிறப்பாக எழுதியுள்ளார்கள். பொதுவாக ஆத்மீக நூல்களை

படிக்க வேண்டுமென்றால் ஆத்மீக வாதிகள்தான் படிக்க முடியும். அவ்வளவு கடின நடையில்தான் அவை இருக்கும். ஆனால் நண்பர் திரு.ராமானுஜம் எழுதியுள்ள "பார்புகழும் பாம்பாட்டிச் சித்தர் வரலாறு" என்ற புத்தகம் எளிய நடையில் எழுதப் பட்டுள்ளது. தமிழ்ப் படிக்கத் தெரிந்த எல்லோராலும் புரிந்து கொள்ளும் வகையில் உள்ளது. அவர் பணி தொடர - சிறக்க எனது உளம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக!

என் வணக்கத்துக்குரிய தவத்திரு பிரம்ம ஸ்ரீ சித்தராஜ சுவாமிகளின் தெய்வப் பணி தொடர்ந்திட இறைவனை வணங்கி வேண்டுவதோடு, அன்னாருக்கு எல்லோரும் ஒத்துழைப்பு நல்கி அவர் தம் ஆசி பெற வேண்டுகிறேன்.

சிவகிரி
23.8.95

அன்புடன்
(இரா. பாஸ்கரவேலு)

வாழ்த்துப்பா

முல்லை மல்லி மலருள்ளம் கொண்ட மனிதர்
முக் குலத்தின் முடி புனையா பேரரசர்
வெள்ளை மனம் கொண்ட தாலே இவர்
வெள்ளைச் சாமி தலைவரென்ற பெயரும் பெற்றார்
இல்லை என்ற சொல்லே இவரிடம் இல்லை
இனமானம் காப்பதில் இவருக்கு ஈடுயிணை இல்லை
கள்ளம் கபடம் ஏதுமில்லா இப் பெருந்தகையர்
உள்ளம் ஒன்றிய பொதுச் சேவையில் உயர்தருமர்
அற வழியில் அரசியலும் அடிபணியா
பெருந்திறமும்
அடுக்கடுக்காய் வெற்றிதர ஊராட்சி ஒன்றியத்
தலைவரானார்
ஊராரின் குறை தீர்த்து அவருளங்களிலே குடியேற
நாடாளும் அரசியலார் இவரைத் தானாக நாடி
வந்தார்
நாடி வந்த நல்லோர்கள் நாநயத்தார் கைகளிலே
நெல்லை காங்கிரசின் மாவட்டத் தலைமையினை
ஒப்படைத்தார்
தளர்வில்லாப் பணி செய்தே தலைவர்
தலைமையென்ற
தமிழ் சொல்லுக்கு தனி இலக்கணமும் தந்திட்டார்
அடலேறாய் ஆர்த்தெழுந்து புறவாழ்வில் வெற்றிக்
கண்ட பெருமீசைக்காரர்
அக வாழ்க்கைப் படகினிலே அடக்கமுடன்
துடுப்பசைக்க
ஆழ் கடலுள் சென்று நல்முத்தேழு எடுத்து வந்து
வாழ் வாங்கு வாழ நல்லவழி அமைத்திட்டார்
கீழக் கரிசல் குளம் வாழுமுயர் தேவரிவர்

வரலாற்றைத் தொகுத்து ஒரு புத்தகம் வெளியிட வேண்டுமென்று எனது குருநாதர் பிரம்ம ஸ்ரீசித்தராஜ சுவாமி அவர்கள் எனக்குக் கட்டளை யிட்டார். குருநாதரின் கட்டளையினை ஏற்று, அவர் திருவாய் மலர்ந்தருளிய குறிப்பினைக் கொண்டு என்னால் இயன்றளவு பாம்பாட்டிச் சித்தரது புனிதமான வரலாற்றைத் தொகுத்துள்ளேன். நான் தொகுத்துள்ள இந்த வரலாற்றில் தவறுகள் ஏதுமிருப்பின் என்னை மன்னித்து அருள்புரிய வேண்டுமென்றுப் பாம்பாட்டிச் சித்தர் பதம் பணிந்து வேண்டுகின்றேன். இதனைப் படிக்கும் பக்தர்கள், இதில் தவறுகள் ஏதும் கண்டால் அடியேனைப் பொறுத்தருளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இவ்வரலாற்றைத் தொகுப்பதற்கு எனக்கு உதவி செய்த அனைத்துப் பெருமக்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். எனது குருநாதர் தவசீலர் பிரம்ம ஸ்ரீ சித்தராஜ சுவாமி அவர்களின் பொற்பாத கமலங்களில் இந்த நூலை வைத்து வணங்கி, என் எழுத்துப் பணி மென் மேலும் வளர நல்லாசி கோருகின்றேன். என்னாலும் எழுத முடியும் என்பதனைக் கடந்த பத்தாண்டுகளாக எனக்குள் உணர்த்திக் கொண்டிருக்கும் காரையம்பதி வாழ் அன்னை ஸ்ரீமுத்துமாரியின் திருப்பாதம் பணிந்து, இந்நூலை அருள்மிகு ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர் சமாதி பீடத்தின் சார்பாக மதுரை

ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர் சேவா சமாஜ் நிர்வகத்தார் புத்தகமாக வெளியீடு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்படிக்கு,
ராமானுஜம் சுவாமிகள
பாம்பாட்டிச் சித்தர் சமாதி
பீடம்

தேதி 10.6.1996

பார் புகழும்
பாம்பாட்டிச் சித்தர் வரலாறு
சங்கரன் கோவில்.

தொகுப்பு திரு.ராமானுஜம் சுவாமிகள்

விநாயகர் வணக்கம்

'பரப் பிரம்மம்' பாம்பாட்டிச் சித்தரது
பரிசுத்த வரலாற்றைத் தீந் தமிழில்
பிழையின்றி எழுதுதற்குப் பெருமை மிகு
பிள்ளையார்பட்டிக் கணபதியே அருள் புரிவாய்.

பாம்பாட்டி காயத்ரி மந்திரம்.

'ஓம் கொல்லிகிரி சஞ்சாராய வித்மஹே
விசித்திர ரூபாய தீமஹி
தன்னோ பாம்பாட்டிச் சித்த பிரசோதியாத்' -

பாம்பாட்டிச் சித்தர் மந்திரம்.

' ஓம் சங்கரனாலய பதிவாழ் சித்தராய
விசித்திர ரூபாய பாம்பாட்டிச்
சித்தராய நம ' :

நன்றி :- 5.6.1995 - கோவை
ஞானசிந்தாமணி மருத்துவ மாநாடு
சிறப்பு மலருக்கும், இதனை
மலருக்குக் கொடுத்த மதுரை பி.
சுந்தரராஜன் அவர்களுக்கும்.

பாம்பாட்டிச் சித்தர் அகவற் பா

அகரத்தை அறிந்த முதல்வா போற்றி
ஆரம்பம் முடிவும் அறிந்தோய் போற்றி
முத்தமிழ் தந்த மூலவா போற்றி
முக்காலம் இருக்கும் மூர்த்தியே போற்றி
இமயத்து வம்ச ஏந்தலே போற்றி
இமவான் மகள் நேசனே போற்றி
காய கல்ப கலையினைக் கற்ற
காலங்கள் கடந்த சித்தனே போற்றி
மனிதனாய்ப் பிறந்து மாதவம் செய்து
மண்டலக் குண்டலினிப் பாம்பினை எழுப்பி
ஆடு பாம்பே விளையாடு பாம்பேயென

அருந் தமிழ்க் கவிமூலம் மக்கள்
ஊனிலும் உயிரிலும் கலந்தோய் போற்றி
சாகாக் கலையெனும் சாகசம் கற்ற
சத்திய சீல கோசாயி போற்றி
மனம் போல் வாழ்வெனக் கூறி
மக்கள் மனமறி மகேசா போற்றி
உயிர் உடல் உளநோய் தீர
உண்மை மருத்துவம் தந்தவா போற்றி
பொய்யினை அழித்து மேதினி தன்னில்
மெய்யினை நிறுத்த மெய்ப்பொருள் கண்ட
ஐயனே பாம்பாட்டிச் சித்தனே போற்றி
அறிவினை அறிந்து ஆராய்ச்சி செய்து
அரிய பச்சிலை மருந்தின் மகத்துவம்
ஆய்ந்து நோய் நொடி நீக்கிய
சித்த மருத்துவத் தலைவா போற்றி
மெய் ஞானத்தால் அறிய விஞ்ஞான
வித்தைகள் அனைத்தையும் கண்டு இவ்
வுலகிற்கு ஈந்த முதல்வா போற்றி
சித்துகள் எட்டிலும் ஈடில்லாப்புகழுடை
சித்தர் கூட்டத் தலைவா போற்றி
விதியினை மாற்றி வேதனை தீர்க்கும்
வித்தகச் சித்தர் கணமே போற்றி
மண்ணில் பிறந்து மாதவம் செய்து

மங்காப் புகழுடைச் சங்கரன் கோவிலில்
ஜீவ சமாதி நிலையினைப் பெற்ற
பாம்பாட்டியே நின் மலர்ப்பதம் போற்றி....

கோமதி வணக்கம்

மாதவம் செய்து கோநகர் சங்கையில்
மகேசனே ஹரியென உணர்த்திய சக்தியின்
பிரதிஷ்டா மூலன் பாம்பாட்டி சரிதையை
பைந்தமிழில் எழுத கோமதியே அருள்புரிவாய்.

ஓம் தத் ஸத்

குரு வணக்கம்

சிங்க	நடை	யழகர்
சங்கத்	தமிழ	ழகர்
முத்துப்	பல்	லழகர்
மோகச்	சிரிப்	பழகர்
கட்டுக்	குலையா	உடலழகர்
கானக்	குரல்	அழகர்
தங்க	நிறத்	தழகர்
தளராக்	கொடை	யழகர்
நீள்	கொண்டைச்	சடையழகர்

பால்	வண்ண	மனத்தழகர்
சங்கீதச்	சாரல்	பண்
பாடும்	குற்றால	அருவியிலே
சிவா	னந்தப்	பெரியோரால்
சித்த	ராஜனென்ற	பட்டமுடன்
சிறந்த	தவ	சீலர்
பொய்	யேதும்	அறியாத
மெய்யான	பெருஞ்	சக்தியினை
மேதினிக்குக்	காட்டாது	நல்
நெய்யாக	உருகி	ஓடி
நாதன்	பாம்பாட்டி	புகழ்
பரப்பும்	என்	குரு
நாதன்	மெய்யடி	தொழுது
குண்டலினிப்	பாம்பாட்டி	சரிதையினைக்
குறை	வின்றி	நானெழுத
பேராசி	செய்	யுமாறு
பெரும்	பணிவோடு	வேண்டுகிறேன்.

பதினெண் சித்தர் வணக்கம்

பதினெண் சித்தர் அடி பணிந்து
பைந்தமிழால் நற் பாட்டிசைப்போம்
தமிழ் இலக்கணம் தந்த அகத்தியனைத்
தினமும் போற்றிப் புகழ்ந்திடுவோம்
தங்கத் தமிழ் முருகனைப் பழனியில்
தந்த போகரையும் மகரிஷி
பதஞ்சலியையும் திருமூலர் காலங்கியோடு
பார்த்தே வணங்கித் துதித்திடுவோம்
நந்தி சுந்தரானந்த சிவ வாக்கியரை
நாளும் தொழுது வணங்கிடுவோம்
புண்ணா க்கீசர் புகழ் பாடிப்
புலிப் பாணியையும் தொழுதிடுவோம்
மச்ச முனிக்கு வணக்கஞ் செலுத்தி
வாதகாவிய கருவூரானைப் போற்றிடுவோம்
கொங்கணச் சித்தர் பதம் பணிந்தே
கோரக் கரையும் வாழ்த்திடுவோம்
பாரதம் அருளிய வியாசரையும் குண்டலிப்
பாம்பாட்டி (ய) சித்தரையும் பாராட்டிடுவோம்
சட்டை முனியோடு ராம தேவரையும்
சாஷ்டா ங்கமாய் நமஸ்கரித்தே
உலகினில் நீதி நேர்மை நிலைத்திட
உண்மைச் சித்தரிவர் துணைகேட்போம்.

1

கோசாயி வம்சத்தார் வாழ்ந்த இமய மலையின் மாட்சி.

எழில் சிந்தும் அழகுத் திருமேனி எங்கும் தூய வெண் பனியென்ற திரை மூடி வான் முட்டக் கம்பீரமாய் எழுந்து நிற்கும் மாமலை. முச்சங்கம் கண்டு தமிழன்னை புகழ்பாடிய பாண்டிப் பதியின் தமிழ்ச் சங்கத் தலைவன், தென் நாடுடைய ஈசன், மூர்த்திகளுள் முதல் மூர்த்தி, "நமசிவாய" என்ற "பஞ்சாட்சர "நாயகனான சிவபெருமானின் மனம் கவர்ந்த நங்கை அன்னை பார்வதி தேவியினைப் பெற்றெடுத்த மலை. இமவான் மகளாகப் பிறந்த பார்வதி தன் அம்புலிப் பருவத்திலே தவழ்ந்து விளையாடிய மலை. (அன்னை பார்வதி தேவி இமாசலப் பிரதேசத்தில் ''மணிக்கரன்'' என்ற இடத்திற்கு மேற்கே அமைந்துள்ள "மாஞ்சோலை" என்ற இடத்தில் இமவான் என்ற பேரரசனுக்கு உறிம புத்திரியாக அவதரித்தாள் என்று நமது புராணங்கள் கூறுகின்றன. மாஞ்சோலைக்கு மேற்கே உள்ள ''மணிக்கரன்'' எனற இடத்தில் தான் அன்னை பார்வதியின் செவியில் உள்ள "மணி" என்ற வைர ஆபரணம் கழன்று பூமியில் விழுந்ததாகவும், அப்போது அவ்விடத்தில் வசித்து வந்த பாம்பொன்று

அந்த ஆபரணத்தைத் தன் வாயால் கவ்வி, அன்னையின் திருக்கரத்தில் ஒப்படைத்ததாகவும் புராணங்கள் செப்புகின்றன. இந்நிகழ்ச்சியின் காரணமாகத் தான் அவ்விடத்திற்கு "மணிக்கரன்" என்ற பெயர் சூட்டப்பட்டதாகவும் கூறுவர். மேலும், அந்தப் பாம்பு தன் வாயினால் ஒரு வெந்நீர் ஊற்றை அங்கு உற்பத்தி செய்தது என்ற ஒரு செவி வழிச் செய்தியும் நிலவி வருகிறது.

மகரிஷிகளும், முனிவரும், தேவரும், சித்தரும் தவம் செய்யும் புண்ணியத் தவமலை. கூவித் திரிகின்ற குயிலினமும், துள்ளித் திரிகின்ற மானினமும், பாய்ந்து தாக்கும் சிறுத்தைப் புலியினமும், நெடிதுயர்ந்த கரடி இனமும் ஒன்றாகக் கை கோர்த்து விளையாடும் மலை. வண்ண வண்ணப் பூவினங்கள் வாசமுடன் பூத்துக் குலுங்குகின்ற மலை. பசுமை நிறப் பச்சிலை செடி கொடிகள் பல்கிப் பெருகிப் படர்ந்த மலை. தேனினும் இனிய தீஞ்சுவைப் பழமும், கிழங்கும் நிறைந்த மலை. இதயத்தை உறைய வைக்கும் உறை பனித் தென்றல் தவழும் மலை. பரந்தாமன் வாமனனாய் அவதரித்த போது ' வாமன ஆசிரமம் ' அமைத்துத் தவம் செய்த மலை. புண்ணிய இராமபிரானின் இளவல் இலட்சுமணன் நீராடி மகிழ்வதற்காக, மகரிஷி வசிஷ்ட்டரால் உற்பத்தி செய்யப்பட்ட வெந்நீர் ஊற்றான 'இலட்சுமண

குண்டாவைப் பெற்றமலை. மகரிஷி வசிஷ்ட்ட பகவான் 'வசிஷ்ட்டாசிரமம்' அமைத்து நீண்ட நெடுங்காலம் தவம் செய்த தவமலை. இந்த ஆசிரமத்திற்கு அருகில் தான் இடும்பன் வாழ்ந்த இடும்பாவனம் அமைந்துள்ளது. யுக புருஷனும் கவிச்சித்தனுமான பாரதியால் 'வெள்ளிப் பனி மலை மீது உலாவுவோம்' என்றும் 'மன்னும் இமய மலை எங்கள் மலை' என்றும் புகழந்து பாடப்பட்ட பனி மலை. வார்த்தைகளால் வருணிக்க முடியாத பல சிறப்புக்களைப் பெற்ற எங்கள் இமய மலை தான் 'கோசாயி' என்ற வம்சத்தாரின் பூர்விக இடமாகும். கி.மு. (பி.சி.) ஆறாம் நூற்றாண்டில் இமாச்சல் இராஜியத்தை கொள்ளு என்ற மாமன்னன் ஆட்சி புரிந்தான். இவன் தனது எல்லையினை இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மணாலி, மண்டி, மணிக்கரன், மாஞ்சோலை மற்றும் ஜோதீந்திர நகர் வரை விரிவு படுத்தியிருந்தான். (தற்போது இந்த ஜோதீந்திர நகர் வரை புகைவண்டி வசதி உள்ளது. மேலும் கொள்ளு என்ற இப்பகுதி இமாச்சலில் தற்போது தனிமாவட்டமாகவும் திகழ்கிறது). இம்மன்னனது ஆளுகைக்குள் உட்பட்டிருந்த பகுதியில் மூன்று நதிகள் ஓடி இவனது இராஜியத்தை வளப்படுத்தின. 1) பார்வதிநதி 2) பிரம்மநதி 3) வியாசநதி மாஞ் சோலைக்குக் கீழும் மணிக்கரனுக்கு மேலும் 'கீர்கங்கா' என்ற பகுதி உள்ளது. அன்னை பார்வதி

தேவி, தனது மைந்தன் ஆறுமுகன் கோபித்துக் கொண்டு செல்லும் போது, பால் கொடுத்து கோபத்தைத் தணித்த இடமென்று இவ்விடத்தை அப்பகுதி மக்கள் சொல்லுகின்றனர். இங்கு வெந்நீர் ஊற்று ஒன்றும் உள்ளது. இந்த ஊற்றுச் சுடு நீரில்தான் சாதுக்கள், மற்றும் யாத்ரீகர்கள், பக்தர்கள் முதலியோர் சமைத்துச்சாப்பிடுகின்றனர். நவராத்திரி என்ற திருவிழா முதன் முதலில் தோன்றியதும் இமாச்சலில்தான். பல ஊர்களில் இருந்தும் சக்தியின் உற்சவ மூர்த்திகள் நவராத்திரி விழாவன்று இமாச்சலுக்கு வந்து சேரும். இன்றும் இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. சக்தியின் அம்சமான அஷ்ட துர்க்கைகளும் குடிகொண்டுள்ள இடம் இமாச்சல் ஆகும். இவ்வாறு பல சிறப்புகளைப் பெற்ற இமாச்சலப் பிரதேசத்தை கொள்ளு மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். அவனது ஆட்சியில் நவராத்திரி விழா மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்குத் தேவாதி தேவர்களும், இந்திராதி முனிவர்களும், நவகோடிச்சித்தர்களும், ரிஷிகளும், சாதுக்களும் கலந்துகொண்டு கொள்ளு மாமன்னருக்குப் பெருமை சேர்த்தனர். கொள்ளு அரச சபா மண்டபத்தில் இவர்கள் அனைவரும் குழுமியிருக்க மன்னனது முன்னிலையில் நவராத்திரி விழா சிறப்புறத் தொடங்கும். இவ்விழாவின் போது சாதுக்கள் அனைவருக்கும்

மன்னன் கோதானமும், த்ரவிய தானமும், பொற்காசு தானமும், பூமி தானமும், அன்னதானமும் செய்து மகிழ்விப்பான். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒரு நவராத்திரி விழாவில் மன்னரது சபா மண்டபத்தில் இருந்த சாது ஒருவர் கொள்ளு அரசனைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டார். எங்களுக்குப் பலவிதமான தானங்களைக் கொடுக்கும் மன்னவா. இந்த முறை கன்னிகாதானம் செய்து எங்களை மகிழ்விப்பாயா என்றார். மன்னனும் அதற்கிசைந்து கன்னிகாதானம் செய்து கொடுத்துச் சாதுக்களை மகிழ்வித்தான். அவ்வாறு கொள்ளு அரசன் தானமாகக் கொடுத்த கன்னியரைச் சாதுக்கள் மணந்து இல்லறத்தை நல்லறமாய் நடத்த, இதிலிருந்து உற்பத்தியானது தான் கோசாயி வம்சம் ஆகும். இந்தக் கோசாயி வம்சத்தில் வந்தவர் தான் நமது பாம்பாட்டிச் சித்தர். எனவே கோசாயி வம்சம் உற்பத்தியானது கி.மு. (பி.சி.) ஆறாம் நூற்றாண்டு தான் எனத் தெளிவாகச் சொல்லலாம். இந்த வம்சத்தார். ஆவினை மேய்த்தும், ஆப்பயனைக் கொண்டும் வாழ்க்கை நடத்தினர். மாடுகளை அலங்காரம் செய்து, தங்களது தலையில் கிரீடம் ஒன்றைச் சூடிக் கொண்டு, வீடு வீடாக மாட்டினை அழைச் சென்று பிட்சை பெற்றும் தங்கள் வாழ்க்கையினை நடத்தினர். இவ்வாறு சில

நூற்றாண்டுகள் இமாச்சலில் வாழ்ந்த கோசாயி வம்சத்தார் பல கிளைகளாகப் பிரிவுற்றுப் படிப்படியாக வட இந்தியாவை விட்டுத் தென் இந்தியாவிற்குள் குடியேற ஆரம்பித்தனர். இதற்குரிய ஆதாரம் இன்றும் கொல்லூா அரச பரம்பரையிடம் உள்ளது. இங்ஙனம் தென் இந்தியாவிற்குள் நுழைந்த கோசாயி வம்சத்தில் பிறந்து மாதவம் செய்து, சித்துகள் எட்டிலும் வெற்றி பெற்ற பதினெண் சித்தர்களில் ஒருவர் ஆனவர்தான் நமது பாம்பாட்டிச்சித்தர்.

பாம்பாட்டிச் சித்தர் அவதரித்த இடம் பாண்டி நாடு என ஒரு சாரார் கூறுவர். ஆனால், இவர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருக்கோகரணத்தில் பிறந்தவர் எனக் கூறுவதே, சற்றுப்பொருத்தமானதாக இருக்கும். இவர் கொங்கு நாடு என அழைக்கப்படும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மருத மலையில் உள்ள குகையில் நீண்ட தவமியற்றி அட்டமா சித்தி கண்டார். அங்கு இவர் தவம் செய்ததற்கான வாழ்க்கைச் சான்றுகள் இன்றும் காணப்படுகின்றன. மண்டலத்தில் உள்ள 'குண்டலினி ' சக்தி என்ற பாம்பைத் தட்டி மேலெழுப்பி, அட்டமா சித்தி பெற்றுத் தனது அனுபவங்களில் கண்ட உண்மைகள் அனைத்தையும் எளிய தமிழில் பாம்புப் பாட்டாக்கித் தருகிறார் பாம்பாட்டிச் சித்தர்.

ஆடிடு குண்டலிப் பாம்பே - எங்கள்
ஆதிசிவன் முடியில் ஆனந்தப் படம் விரித்தே
ஓடிவரும் கங்கை நதி ஓங்காரக் குழலூத
ஆடிடு குண்டலிப் பாம்பே
கோணத்தில் உறங்கிடும் பாம்பே - மஹா
குண்டலிக்கனல் பறக்கக் குப்பெனச் சீறிமிக
ஆண்மை கொண்டெழுந்திடும் பாம்பே - கீழ்
ஆதாரம் ஆறையும் மீதேறித் தாவியே
ஆடிடு குண்டலிப் பாம்பே.

என்று குண்டலினி சக்தியைப் பாம்பாக்கி ஆனந்தக் கூத்தாடுகிறார். சூட்சுமக் குடத்தில் பாம்பை அடைப்பதைப் பற்றி பின்வருமாறு பாடுகிறார்.

சூத்திரக் குடத்திலே பாம்பை யடைப்போம்
சுழுமுனைக் குள்ளேயே சுகித்திருப்போம்
பாத்திரம் கொண்டுமே பலியிரப்போம்
பத்தெட்டு மூன்றான படிகடப்போம்
ஊத்தைச் சடலத்தினைப் புடமிடுவோம்
உளவன் எமக்கு நல் உறுதி சொல்லப்
பார்த்துரை இதன் மெய்பலிக்க எண்ணிப்
' பதனம் பதனம் ' என்றே ஆடு பாம்பே !

எனச் செப்புகிறார் பாம்பாட்டி. நமது உள்ளத்தைப் பிராண சக்தியின் மூலம் புடம் செய்து, உடலைத்தியானத்தின் மூலம் கட்டுப்படுத்தி, பத்து ஞான கர்மேந்திரியங்களையும் கட்டுப்படுத்தி, தூல,

சூச்சும, காரண சரீரங்கள் மூன்றினையும் சக்திமயமாக்கி, அந்தகரண பாத்திரத்தில் திருவருள் பிச்சையை ஏற்றுக் குண்டலியினைக் குண்டத்தில் இட்டு, சுழிமுனைக் குறிப்பின் மூலம் சூட்சுமத்தை அறிந்ததைப் பற்றி இப்பாடலில் விளக்குகின்றார்.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது எனச் செப்புகிறார் ஒளவை. அவ்வாறு பிறந்த மனிதப் பிறவியில் கோசாயி என்ற வம்சத்தில் பிறந்த பாம்பாட்டிச் சித்தர் மாதவம் செய்து, முதன் முதலில் தன்னை அறிந்து புனிதராகி, உலக இன்ப துன்பங்களைத் துறந்து சடமான உடலில் தூய சக்திப் பொருளான சிவம் எது என்பதைக் கண்டறிந்து தனது குருநாதர் சட்டமுனியின் தீட்சைப் பெற்று, பதினெட்டுச் சித்தர்களில் ஒருவராகிச் சிறப்பிடம் பெற்றார். தனது குருநாதர் முன்னிலையில் குண்டலினி யோகத்தால் பஞ்ச பூதம் ஐந்தையும் ஐந்து தலைநாகமாக்கி ஆட்டிக் கொண்டிருந்த காரணத்தால் இவருக்குப் 'பாம்பாட்டிச்சித்தர்' எனப் பெயர் வந்ததாக ஒரு சாரார் கூறுவர்.

2

சித்தர் என்பவர் யார் ?

மனிதனாய்ப் பிறந்து தவமதில் சிறந்து சித்தர் கணங்கள் பதினெண்மரில் ஒருவரான பாம்பாட்டிச் சித்தர் பற்றி இதுவரை பார்த்தோம். இப்பகுதியில் சித்தர்கள் யார் என்பதற்குரிய விளக்கத்தினைப் பார்ப்போம். சித்தர்கள் என்றாலே அதிசயம் செய்யக்கூடியவர்கள் என்றும், மந்திர தந்திரத்தின் மூலம் சிவலிங்கம், பூ, பழங்களை வரவழைக்கக் கூடியவர்கள் என்றும், இரசவாதம் மூலம் இரும்பினையும், மற்ற உலோகத்தையும் பசும் பொன்னாக்கித் தரக்கூடியவர்கள் என்றும், மக்கள் பலரும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் இன்றும் பலர் சித்தர்கள் என்ற போர்வையில் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக் கிறார்கள். மேற்படி வித்தைகளை எவன் ஒருவன் செய்து பாமர மக்களைச் சித்தர்கள் என்ற போர்வை யில் ஏமாற்றுகிறானோ - அவனைச்சித்தர் என்ற புனிதமான வார்த்தையில் அழைப்பது மிகவும் வருத்தத்தைத் தரக்கூடிய செயலாகும். அவனைச் செப்படி வித்தைக்காரன் என்று அழைப்பதே சாலச் சிறந்ததாகும். நீங்கள் உண்மையிலே சித்தர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்றால் மனதில்

வஞ்சம் ஏதுமின்றித் தூய்மையுடன் வந்தால் நிச்சயம் அவர்களது பரிபூரண தரிசனம் கிட்டும். தன் சித்தந் தெளிந்த வனே சித்தர் முக்தர் ' ஆவான். அதாவது பக்தி என்ற பெருங் கடலுள் மூழ்கித் தனது சக்தி எங்கிருக் கிறது என்பதனைக் குண்டலினி யோகத்தால் அறிந்து, அதனை நன்முறையில் சுத்தி செய்து இந்த மூன்றால் முக்தி என்ற நிலையினை அடைந்து சித்தியானவனே சித்தன் எனப்படுவான். தனது ஜீவனுக்குள் சிவனைக் கண்டவரே சித்தர் ஆவார். இதனையே திருமூலசித்தர் தனது திருமந்திரத்துள் பின்வருமாறு விளக்குகிறார்.

சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர் ;
சத்தமும் சத்த முடிவுந்தம்(முன் கண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல் முப்பத்தாறே

(திருமூலர் திருமந்திரம்).

என்கிறார் திருமூலர்.

முப்பத்தாறு அகத் தத்துவங்களை இங்கே திருமூலசித்தர் சுட்டிக் காட்டுகிறார். அவை என்னவென்று இப்போது பார்ப்போம்.

5 + 7 + 24 = 36 தத்துவங்களையே திருமூலர் இங்கே குறிப்பிடுகின்றார்.

*' முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியா
ஒப்பில்லா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப வரிய சிவங்கண்டு தான்தெளிந்
தப்பரி சாக அமர்ந்திருந் தாரே '*

(திருமந்திரம் 126)

சிவ தத்துவங்கள் ஐந்தாகும்

1. சிவம்
2. சக்தி
3. சதாசிவம்
4. ஈசுரம்
5. சுத்த வித்தை

வித்யா தத்துவங்கள் ஏழாகும்

1. காலம் 2. நியதி 3. கலை 4. வித்தை 5.அராகம் 6. புருடன் 7. மாயை

ஆன்ம தத்துவங்கள் இருபத்தி நான்கில்

பஞ்ச பூதங்கள் 5

1. ஆகாயம் எனப்படும் வான்வெளி 2.காற்று எனப்படும் வாயு 3. தீ எனப்படும் தேயு 4.நீர் எனப்படும் அப்பு 5. பிருதிவி எனப்படும் நிலம்.

தன் மாத்திரைகள் 5

1. சத்தம் எனப்படும் ஓசை 2. பரிசம் எனப்படும் ஊறு 3. ரூபம் எனப்படும் ஒளி

4. ரசம் எனப்படும் சுவை 5. கந்தம் எனப்படும் நாற்றம்)

கன்மேந்திரியங்கள் 5

1. வாக்கு என்ற வாய் 2. பாதம் என்ற கால் 3. பாணி என்ற கை 4. வாயு என்ற அபானம் 5. உபத்தம் என்ற குறி.

ஞானேந்திரியங்கள் 5

1. சுரோத்திரம் என்ற செவி 2. துவக்கு என்ற மெய் 3. சட்சு என்ற கண் 4. சிங்நுவை என்ற நாக்கு 5. கிராணம் என்ற மூக்கு.

அந்த கரணங்கள் 4

1. மனம் 2. புத்தி, 3. அகங்காரம் 4. சித்தம் ஆக இவை இருபத்தி நான்கே ஆன்ம தத்துவம் எனப்படும்.

மேற்சொன்ன அனைத்தையும் சுத்தமாக்கிப் பின் சக்தி மயமாகிச் சுத்த சக்தி சொருப குண்டலினி நெருப்பினில் நீந்தி,

' ஆனந்த மன விஞ்ஞான
அன்ன ' பிராணத்தில் பரிபூரணம்
பெற்றோரையே சித்தர் எனச் செப்புவோம்.

மூலாதாரத்தில் சுருண்டு கிடக்கும் குண்டலிப் பாம்பைத் தட்டி எழுப்பி மேலே ஏற்றினால் சகஸ்ராரத்தில் நாம் சிவனைக் கண்டு கொள்ளலாம். அப்போது நமக்குள் இருக்கும் சுத்த சக்தியானது சிவனுடன் சேர மஹா குண்டலி சக்தி திறக்கும். அச்சமயத்தில் நமது உடம்பில் பெருஞ் சூடு பரவி அதிர வைக்கும். இவ்வாறு ஒருவருக்கு நடந்தால் அவர் இதுவரை செய்து வந்த தியானங்கள் இதன் மூலம் நிலைத்து நிற்கும். அவருக்கும் சமாதிநிலை கைகூடி வரும். இவ்வாறு 1) மூலாதாரம், 2) சுவாதி ஷ்டாணம் 3) மணிபூரகம் 4) அனாகதம் 5. விசுத்தி 6) ஆக்ஞை 7) ஸஹஸ்ராரம் என்ற ஏழையும் எட்டிப்பின், எட்டாவதாக உள்ள பிரம்மத்தை எட்டுவதைச் சுட்டிக் காட்டவே பாம்பாட்டிச் சித்தர் நாதர் முடி மேலிருக்கும் நாகப் பாம்பே எனப் பாடினார்.

மேற்சொன்ன நிலைகளை அடைந்தவர்கள் தாம்' சித்தர்' எனப்படுவர். இதனைத் திருமூலர் தனது தில்லை ஞான மந்திரம் 11–இல் . பின்வருமாறு விளக்குகிறார்.

அடியாகி அண்டரண்டத் தப்பால் ஆகி
ஆகாரமெனு மெழுத்ததுவே பாதமாகி
முடியாகி நடு ஆகி மூலம் தன்னில்
முப் பொருளும் தானாகி முதலுமாகிப்
படியாகி முப் பாழற்றுப் படிக்கு மப்பால்
படி கடந்த பரஞ்சோதிப் பதியுமாகி
அடியாகு மூலமதே அகரம் ஆகி
அவனே சிவனாய் நின்றநிலை அணுவதாமே !

என்கின்றார் திருமூலர்.

மேலும், திருமூலர் சிந்தை தெளிந்து சிவமாதல் பற்றிக் கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்.

*' விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில்
சந்தியிலான சமாதியிற் கூடிடும்
அந்தமிலாத அறிவி னம் பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடுந் தானே '*

(திருமந்திரம் - 619)

என்றும்,

*' சந்திரன் சூரியன் தான் வரிற் பூசனை
முந்திய பானுவில் இந்துவந் தேய்முறை
யந்த விரண்டு முபய நிலத்திற்
சிந்தை தெளிந்தார் சிவமாயினாரே '*

(திருமந்திரம் 1989)

என்றும் சொல்லுகிறார். மேற்சொன்ன பாடல்களில் திருமூலர் நமக்குத் தரும் விளக்கம் என்னவென்றால், சூரிய, சந்திரர் ஒன்று சேர்ந்திடும் போது, சூரிய கலையும், சந்திர கலையும் சுழிமுனை நாடியில் புருவத்தின் மத்தியிலுள்ள ஆக்கினை என்னும் சக்கரத்திலுள்ள 'ஞானாக்கினி' கலையில் சென்று சேர்வதாகக் கூறியுள்ளார். இவ்வாறு புருவ மத்தியில் ஒன்று சேரும் போது அதன் மத்தியில் உள்ள ஞானக்கண் எனப்படும் அகக்கண் திறக்கிறது. நமது ஆன்மாவானது மலத்தினால் சிறிதும் மறைக்கப்படாது சிவத்தின் ஒளியினை முழுதும் அண்டிச் சார்ந்திருப்பதால் அது தற்போது முழுவது மாகச் சிவமாகி விடுகின்றது. இவ்வாறு மேற்சொன்ன நிலைகளை அடைந்து, தாமே சிவமானவரே சித்தர் எனப்படுவார்.

3

சீடனைத் தேர்ந்தெடுத்தல்

பாம்பாட்டிச் சித்தர் தனது சீடனை எவ்வாறு தேர்ந்தெடுத்தார் என்பதனைப் பற்றி இப்பகுதியில் பார்ப்போம். மருதமலையில் தவம் செய்த பாம்பாட்டிச் சித்தர் தனது சீடனைத் தேர்வு செய்வதற்காக கேரளா காலடியில் உள்ள அகவூர் மனைக்கு வந்தார். அகவூர் மனையில் கௌரிலட்சுமி - ரவி நாராயணன் என்ற நம்பூதிரி தம்பதியருக்குப் பிறந்த பத்தாவது குழந்தையான - 5 வயது நிரம்பிய பிரபாகரனை, பெற்றோரின் சம்மதத்துடனும் - பிரபாகரனின் சுய விருப்பத்துடனும் தனது சீடனாக பாம்பாட்டிச் சித்தர் தேர்ந் தெடுத்து, பந்தளம் அரண்மனைக்கு அழைத்து வந்து சிலகாலம் தங்கி பந்தள மன்னருக்கு ஆசி வழங்கி பந்தள மன்னனது ஆசியைச் சீடனுக்குப் பெற்றும் தனது சீடன் பின்தொடர தம் பரம்பரையான கோசாயி வம்சம் வாழ்ந்த பூர்வீக இடமான இமாச்சலுக்கு ககன மார்க்கமாகச் சென்றார். இமய மலையில் சுமார் 43 ஆண்டுகாலம் தனது சீடனுக்கு அனைத்து விதமான வித்தைகளையும், கலைகளையும் கற்றுக் கொடுத்தார். குரு சொல்லிக் கொடுத்த அனைத்து விதமான கலைகளையும் மிகவும் கவனத்துடன் கற்று, குருவின் மனம் மகிழச் செய்தார் சீடர் பிரபாகரர். பின் குருவும், சீடனும் துவாரகைக்கு வந்து அங்குள்ள காளிகா தேவியினைத் தரிசனம் செய்த

பிறகு தமிழகத்தில் உள்ள சதுரகிரி (வத்திராயிருப்பு) என்ற மகாலிங்க மலைக்கு வந்து சிறிது காலம் தங்கியிருந்தனர். இதற்குரிய சான்று காலங்கி நாதர் திருவாய் மலர்ந்தருளிய "ஞான விந்த ரகசியம்". என்ற நூலில் உள்ளது.

பேருற்ற சதுரகிரி நாலு பக்கம்
பிரிவுண்டவ் வழியு மெத்தக் கடினமப்பா
சேருமற்ற மூன்று பக்கம் பாதைதானும்
சிவசிவா அடவி வழி சிரமம் மெத்த
நேருற்ற தெற்கு வழிப் பாதை சற்றே
நிகழ்த்துவேன் மலையினடி வாரந்தன்னில்
நீருற்ற வோடையுள தோணிப் பாறை
நிலைகண்டு ஆற்றோரம் சென்றுபாரே
சென்றந்த ஆற்றுவழி திறமதாகச்
சேர்ந்திருக்குஞ் சிறுமலைகள நேகமுண்டு
குன்றந்தச் சாய்வோரம் செல்லும் பாதை
கூடினால் நவசித்தர் குகையொன்றுண்டு
நின்றந்த சித்தர்களை மனத்து ளெண்ணி
நிதானமாய் வழியே போக வேணும்
ஒன்றந்த வழி வடக்கே கொஞ்சதூரம்
உயர்ந்திருக்கும் மலையருகிற் குகையைப் பாரே
பாரப்பா அக்குகையினுள்ளே செல்லப்
பாம்பாட்டி சித்தருமங் கிருப்பார் கண்டு

எனக் காலங்கி நாதர் தனது நூலில் பாம்பாட்டிச் சித்தர் சுந்தர மகாலிங்க மலையில் தங்கியதைச் சுட்டிக் காட்டுகிறார். மகா லிங்க மலையில் சிறிது காலம் தங்கிய பாம்பாட்டிச் சித்தர், சீடர் பிரபாகரருடன் பின்னர் அத்திரி மலைக்குச் சென்று, அத்திரி மகரிஷியின் ஆசி பெற்று, அதன்பின் சங்கரன் கோவிலுக்கு மேற்கே உள்ள 'வீரசிகாமணி' என்ற கிராமத்திற்கு வந்தார். அங்கு 'ஆதி கைலாச நாதர்' கோவிலுக்கு மேலே உள்ள மலை மீது தனது சீடர் பிரபாகரருக்குக் குரு சிஷ்ய முறைப்படி அத்வைத நிலை தந்து ஓம் ஸ்ரீசச்சிதானந்த பதவியில் தனது சீடனை அமர்த்தி மகிழ்ந்தார். மேற்படி இந்த நிகழ்ச்சிக்குச் சான்றாக அம் மலையில் உள்ள குகையின் வெளிப்புறத்தில் 'ஓம் ஸ்ரீ பிரபாகரர்' என முடியும் கல்வெட்டு ஒன்றும், அதன் அருகில் கல்லினால் செதுக்கப்பட்ட இரண்டு பாதங்களும் உள்ளன. அதற்கு அருகே சித்திர வடிவுடைய கல்வெட்டு ஒன்றும் உள்ளது. வீரசிகாமணி மலையை விட்டுப் புறப்பட்ட பாம்பாட்டிச் சித்தர் தனது சீடர் பிரபாகரருடன் சங்கரன் கோவிலை வந்தடைந்தார்.

4

பாம்பாட்டிச் சித்தர் சமாதி நிலையடைதல்

தனது சீடர் பிரபாகரருடன் சங்கரன் கோவிலை வந்தடைந்த பாம்பாட்டிச் சித்தர் "கோமதி அம்மன்" என்ற தெய்வச் சிலையினைப் பிரதிஷ்டை செய்தார்.

கோ + மதி - கோமதி
கோ - என்றால் மாடு எனப் பொருள்படும்.
மதி - என்பது பெண் எனப் பொருள்படும்.

மாடுகளை மேய்க்கும் பெண்ணாகக் கோமதி இங்கு அவதாரம் எடுத்த காரணத்தால் கோமதி எனப்பெயர் பெற்றாள். மாடுகளை மேய்க்கும் கோசாயி வம்சத்தைச் சேர்ந்த பாம்பாட்டிச் சித்தர் கோமதி என்ற தெய்வச் சிலையினை சங்கரன் கோவிலில் பிரதிஷ்டை செய்தது மிகவும் பொருத்தமானதாக விளங்குகிறது. கோமதியினைப் பிரதிஷ்டை செய்த பாம்பாட்டிச் சித்தர் கோவிலுக்குக் கன்னி மூலையில் உள்ள புன்னை வனத்தில் தனது சீடர் பிராபகரருடைய திருக்கரத்தால் ஜீவ சமாதியெனும் 'நிர்விகல்ப சமாதி' அடைந்தார். இவர் சமாதி அடைந்த புன்னைவனம் (15, புளியங்குடி ரோடு) தற்போது

15-ம் இலக்கமுள்ள புளியங்குடி ரோடு என்ற பெயருடன் விளங்குகிறது. பாம்பாட்டிச் சித்தர் சங்கரன்கோவிலில் உள்ள 'புன்னை வனம்' என்ற இடத்தில் தான் சமாதி அடைந்தார் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

1) திரு. நா. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் எழுதி தமிழக அரசால் 1979-ம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்ட ' சித்த மருத்துவ வரலாறு ' என்ற ஆங்கில நூலில் 18- சித்தர்கள் என்ற தலைப்பின் கீழ் உள்ள பகுதியில் 364,365, 366 - ஆம் பக்கங்களில், பாம்பாட்டிச் சித்தர் சங்கரன் கோவில் புன்னை வனத்தில் தான் ஜீவ சமாதியானார், என்பதற்குரிய ஆதாரம் தெளிவாக உள்ளது.

2) "நெற்கட்டும் செவல்" என்ற பூலித்தேவர் ஓலைச் சுவடியில் 18– சித்தர்களும் சமாதியான இடம் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அதிலும் பாம்பாட்டிச் சித்தர் சமாதி சங்கரன் கோவில் என்று தான் குறிக்கப்பட்டுள்ளது.

பாடல்

ஆதி காலத்திலே தில்லையில் திருமூலர்

அழகு மலை இராமதேவர்

அனந்த சயன கும்பமுனி திருப்பதி கொங்கணவர்

கமல முனி ஆரூர்

சோதி அரங்க சட்டமுனி கருவை கருவூரார்
சுந்தரானந்தர் கூடல்
சொல்லும் எட்டிகுடியில் வான்மீகரோடு நற்
றாள் காசி நந்தி தேவர்
பாதி அரிசங்கரன் கோவில் பாம்பாட்டி
பழனி மலை போக நாதர்
திருப்பரங் குன்றமதில் மச்சமுனி
பதஞ்சலி இராமேஸ்வரம்
சோதி வைதீஸ்வரன் கோவில் தன்வந்தரி போயூர்
கோரக்கர் மாயூரங் குதம்பர்
திருவருணையோர் இடைக்காடர் சமாதியிற்
சேர்ந்தனர் எமை காக்கவே.

மேற்சொன்ன இப்பாடலின் மூலமும் பாம்பாட்டிச் சித்தர் சங்கரன் கோவிலில் தான் சமாதியானார் என்பது தெளிவாகிறது.

3. நெற்கட்டும் செவல் என்ற ஓலைச் சுவடியில் உள்ள மேற்சொன்ன பாடலை Dr.யோகி, S.A.A., ராமைய்யா அவர்கள் தான் எழுதிய பதினெண் சித்தர் யோகக் கோவை பாராயணப் பா என்ற நூலில் 28ம் பக்கத்தில் கொடுத்துள்ளார். அவருக்கு இந்தப் பாடல் எப்படிக் கிடைத்தது என்பதையும் ஆங்கிலத்தில் விளக்கியுள்ளார். அந்த விளக்கத்தை அந்நூலில் உள்ளபடியே தந்துள்ளேன்.

According to Krjia Babaji's Tamil Siva Yoga Siddhantha Tradition the 18 Tamil Siddhas are based upon the following verse from an ancient manuscript.

4. மேலும், இதே நூலில் 119ம் பக்கத்தில் திரு. யோகி ராமையா அவர்கள்,

அரிச்சங்கரன் கோவில் பாம்பாட்டிச் சித்தர் பாடல் - 129 என்ற தலைப்பின் கீழ்ப்பாம்பாட்டி யினுடைய பாடல்களைத் தொகுத்துள்ளார். மேலும் பாம்பாட்டிச் சித்தர் உருவப் படம் இரண்டையும் அப்பக்கத்தில் கொடுத்துள்ளார். அப்படத்திற்குக் கீழே ஆங்கிலம், மற்றும் தமிழ்மொழியில் விளக்கமும் எழுதியுள்ளார். அதனை அப்படியே கீழே தந்துள்ளேன்.

ஆங்கில விளக்கம்

Sarpent (Paambatti) Siddha awakened the Kundalini Sarpent Power and attained Soruba Samadhi in Sankaranarayana koil.

தமிழ் விளக்கம்

பாம்பாட்டிச் சித்தர் சங்கரநாராயணன் கோவிலில் சொரூப சமாதி எய்த குண்டலினி நாக பாம்பைத் தட்டி எழுப்பினார்.

5. இந்த நூலின் 148ம் பக்கத்தில் பாம்பாட்டிச் சித்தருடைய பாடல்களைத் தொகுத்து முடித்த பின்பு கீழே ஓர் மந்திரத்தையும் கொடுத்துள்ளார்.

மந்திரம்

ஓம் அரிச்சங்கரன் கோவில் பாம்பாட்டிச் சித்தர் தத் சத் ஓம் பதினெண் சித்தர் நம ஓம்.

எனத் தந்துள்ளார். இவர் எழுதிய மேற்சொன்ன நூல் கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியாரால் வாழ்த்துரை செய்யப்பட்டதாகும். இந்நூலாசிரியரான திரு.ராமைய்யா அவர்கள் 1991ம் ஆண்டு இந்நூலை வெளியீடு செய்துள் ளார்கள். இவர் சென்னை சித்த மருத்துவக் கல்லூரியில் சிறப்புப் பேராசிரியராகவும், பல்வேறு விதமான சித்த சங்க அமைப்புகளில் உறுப்பின ராகவும், இஸ்ரேல், இலங்கை அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் சித்த மருத்துவப் புகழ் பரப்பியும் உள்ளார். மிகச் சிறந்த சித்த மருத்துவ மேதையான இவர், பாம்பாட்டிச் சித்தர் சமாதி இருப்பது சங்கரன் கோவிலில்தான் எனத் தனது நூலில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். திரு. ராமைய்யா அவர்கள் எழுதிய நூலில் இருந்து மேற்சொன்ன ஆதாரங்களை எடுத்தாண்டதற்காக, அன்னார்

அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

6. 5.6.95 கோவையில் நடைபெற்ற மருத்துவ மாநாடு பற்றிச் சிறப்பு மலர் வெளியிட்ட ஞான சிந்தாமணி பத்திரிக்கையில் 18 சித்தர்களும் அடக்கமான இடம், பிறந்த நட்சத்திரமும், மாதம் போன்றவற்றை அட்டவணைப்படுத்தியிருக்கின்றார்கள். அதில் பாம்பாட்டிச் சித்தர் கார்த்திகை மாதத்தில் மிருகசீரிசம் என்ற நட்சத்திரத்தில் 123 ஆண்டுக் காலமும் நான்கு நாட்களும் வாழ்ந்து சங்கரன்கோவிலில் ஜீவ சமாதி அடைந்தார் எனக் கொடுத்துள்ளனர். மேற்படி இந்த சான்றைக் கொடுத்த ஞானசிந்தாமணிப் பத்திரிக்கைக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

7. அஞ்சா நெஞ்ச மாவீரன் பூலித்தேவருக்கு ஏற்பட்ட வயிற்று வலியினைத் தீர்ப்பதற்காக, திருவாவடுதுறை ஆதின கர்த்தா, பாம்பாட்டிச் சித்தருடைய புன்னை வனப் புற்று மண்ணை மருந்தாகப் பயன்படுத்தினார் என்ற செய்தியும் சங்கரன்கோவில் மக்களால் பேசப்பட்டு வருகின்றது.

8. திருவாங்கூரைச் சேர்ந்த மஹாராஜா, பாம்பாட்டிச் சித்தர் சமாதியான புன்னை வனத்துப் புற்று மண்ணை விபூதியாகத் தரித்து மகிழ்ந்து. பெரிய கோவிலுக்கு ஒரு யானைத் தந்தத்தாலான பல்லக்கு தானமும் செய்துள்ளார்.

9) பாம்பாட்டிச் சித்தருடைய சமாதிப் புற்று மண் பிணி தீர்க்கும் நன்மருந்தாகத் தொன்று தொட்டுக் கையாளப்பட்டு வருகின்றது என மேற்கூறிய சான்று மூலம் தெரிகின்றது. மேற்படி சக்தி வாய்ந்த இந்தப் புற்று மண் பெரிய கோவில் எனச் சொல்லப்படும் 'சங்கரநாராயணர்' கோவி -லுக்குள் இல்லை யென்பது . அனைவருக்கும் தெரியும். பெரிய கோவிலுக்குள் இயற்கையாக வளர்ந்த புற்று ஏதும் இல்லை. உக்ரபாண்டிய மன்னரால் கட்டப்பட்ட இந்தக் கோவிலின் வடமேற்கு மூலையில் கல்லால் ஆன புற்று மட்டும் உள்ளது. அப்படியானால் இயற்கையாக வளர்ந்த புற்று பாம்பாட்டிச் சித்தர் சமாதியான கருவறைக்குள்தான் முன்பு இருந்திருக்கிறது. என்பது தெளிவாகிறது. காலப் போக்கில் அந்தப் புற்றை, மண்மூடி மறைத்திருக்கலாம் என நினைக்கத் தோன்றுகிறது. இதனைக் கருத்தில் கொண்டே இன்றும் பல பக்தர்கள் பாம்பாட்டிச் சித்தர் சமாதிக்கு வந்து இங்குள்ள மண்ணைப் புற்று மண்ணாக நினைத்து வழிபாடு செய்து, சித்தரின் ஆசியுடன் தெய்வப் பிரசாதமாய்த் தங்கள் இல்லங்களுக்குக் கொண்டு செல்கிறார்கள். இவ்வாறு பக்தர்கள் எடுத்து செல்லும் புற்று மண் மூலமும் சங்கரன் கோவிலில் பழைய புன்னை வனம் என்ற பகுதி பெரிய கோவிலுக்குப் பின்புறம் சுமார் 400 முதல் 500 அடிக்குள் மேற்குத் திசையில்

அமைந்திருக்கும், தற்போது திருப்பணிகள் விரைந்து நடக்கின்ற பாம்பாட்டிச் சித்தர் சமாதி திருக்கோவிலில்தான், (15, புளியங்குடி ரோடு) பாம்பாட்டிச் சித்தர் தன் ஜீவனைச் சமாதியாக்கினார் என்பது உறுதியாகிறது.

10. பெரும்பாலும், சித்தர்கள் தங்கள் நிஷ்டைக்குப் பொதுமக்கள் வந்து வழிபட்டு இடையூறு செய்யாது இருக்கும் பொருட்டு ஏதாவது ஒரு தெய்வச் சிலையினைப் பிரதிஷ்டை செய்து அதன் கன்னி மூலையில் தாங்கள் அமர்ந்து நிர்விகல்ப சமாதி ஆவதுண்டு. அதாவது தாங்கள் பிரதிஷ்டை செய்த தெய்வச் சிலைக்கு அனைத்து விதமான சக்திகளையும் கொடுத்து, பெரும் புகழ் பெறச் செய்து மூலகர்த்தாவான தங்களை அதிகம் வெளிப்படுத்திக் கொள்ளாமல் அதற்குக் கன்னி மூலையில் சமாதி ஆவதுண்டு. இதற்குச் சரியான உதாரணம் காட்ட வேண்டுமென்றால் பழனி மலையில் முருகனைப் பிரதிஷ்டை செய்த போகரைச் சொல்லலாம். அதைப் போலவே கோமதி அம்மனைப் பிரதிஷ்டை செய்த பாம்பாட்டிச் சித்தர், கோவிலுக்குக்கன்னி மூலையான புன்னைவனத்தில் ஜீவ சமாதி நிலையடைந்தார் எனச் சொல்லுவது மிகத் தெளிவான உண்மையாகும்.

11. அருள்மிகு ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர் அரண்மனை ஒன்று விருதுநகரில் உள்ளது. மேற்படி இடம், விருதுநகர் மேல ரத வீதியில் உள்ள

மூடிப்பட்டி அரண்மனை அந்த் வளாகத்துக்குள் இருக் கிறது. பாம்பாட்டிச் சித்தரது அரண்மனைக்கு அடுத்துதான் பெருந்தலைவர் காமராஜர் இல்லமும் இருக்கிறது. பொது நலத்தில் அக்கறை கொண்ட தன் நலமில்லாப் பெருந்தகை, தமிழகத்து முன்னாள் முதல்வர் சத்திய சீலர் காமராஜ் இல்லமும், பாம்பாட்டி அரண்மனையும் அருகருகே இருப்பது மிகவும் விந்தையாகும்.

12. பாம்பாட்டிச் சித்தர் ஜீவ சமாதித் திருப்பணியினை முதன் முதலில் உக்கிர பாண்டிய மன்னனும், பின்பு செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அதற்கு அடுத்து பூலித் தேவர் அவர்களும், அதற்குப் பின் நாயக்க சமூகத்தைச் சேர்ந்தவர்களும், ஓமலூர் பிள்ளைமார் அவர்களும், ஆசாரி சமூகத்தைச் சேர்ந்தவர்களும் செய்துள்ளனர். இறுதியாகப் பாம்பாட்டிச் சித்தர் ஜீவ சமாதித் திருப்பணியைப் பாம்பாட்டிச் சித்தரின் பிரதான சீடர் ஸ்ரீ சிவப்பிரபாகர சித்த யோகி செய்ய, அவருக்குப் பின் ஸ்ரீபிரபாகரின் சீடர் பிரம்ம ஸ்ரீ சித்தராஜ சுவாமி அவர்கள் மிகவும் விரிவான முறையில் செய்து வருகிறார்கள்.

5

அரிச்சங்கரன் கோவில் வாழும் பாம்பாட்டிச் சித்தர் பாடல்

பாம்பாட்டிச் சித்தர் எழுதிய பாடல்களில் நமக்கு இதுவரை மொத்தம் 129 பாடல்களே கிடைத்துள்ளன. அப்பாடல்கள் அனைத்தும், எளிய சொல் நயமும், தெளிந்த உவமை நயமும், சுருக்கென்று தைக்கின்ற வார்த்தைச் செறிவும் கொண்டவை. குண்டலினி யோகத்தால் தான் அடைந்த அனுபவங்கள் அனைத்தையும் ஆடு பாம்பேயென ஆனந்தக் கவி பாடி, அதன் மூலம் நம்மையும் ஆட வைக்கின்றார் பாம்பாட்டிச் சித்தர். அவர் பாடல்களின் நயத்தைப் பக்தர்களாகிய வாசகப் பெருமக்கள் உணர்ந்து இன்புற வேண்டுமெனக் கருதி அவற்றைக் கீழே கொடுத்துள்ளேன். அதனைப் படிக்கப் படிக்க நம் மனத்திற்குள் பாம்பாட்டிச் சித்தர் படமெடுத்து, ஆனந்தக் கூத்தாடி அருள் பாலிப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சங்கரன் கோவில்
பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள்

தெளிந்து தெளிந்து தெளிந்து ஆடுபாம்பே சிவன்
சீர்பாதங்கண்டு தெளிந்து ஆடுபாம்பே !
ஆடுபாம்பே, நெளிந்து ஆடும்பாம்பே, சிவன்
அடியினைக் கண்டோமென்று ஆடுபாம்பே! 1

நீடுபதம் நமக்கென் றுஞ் சொந்தம் என்றே
நித்தியம் என்றே பெரிய முத்தியென்றே
பாடுபடும்போதும் ஆதிபாதம் நினைத்தே
பன்னிப்பன்னிப் பரவிநின்று ஆடுபாம்பே! 2

பொன்னில்ஒளி போலவெங்கும் பூரணமதாய்
பூவின் மணம் போலத் தங்கும் பொற்புடையதாய்
மன்னும் பல உயிர்களில் மன்னிப் பொருந்தும்
வள்ளலடி வணங்கி நின்று ஆடுபாம்பே ! 3.

எள்ளில் எண்ணெய் போல உயிர் எங்கும் நிறைந்த
ஈசன்பத வாசமலர் எண்ணியெண்ணியே
உள்ளபடி அன்புபத்தி ஓங்கி நிற்கவே
ஒடுங்கி யடங்கித் தெளிந்து ஆடுபாம்பே! 4

அண்டபிண்டம் தந்த எங்கள் ஆதிதேவனை
அகலாம லேநினைத்தே அன்புடன் பணிந்து
எண்திசையும் புகழ்ந்திட ஏத்தி யேத்தியே !
ஏகமன மாகநாடி ஆடுபாம்பே ! 5

சோதிமய மானபரி சுத்தவத்து வைத்
தொழுதழு தலற்றித் தொந் தொந்தோம் எனவே
நீதி தவறாத வழியில் நின்று நிலையாய்
நினைத்து நினைந்துருகி ஆடுபாம்பே ! 6

அருவாயும் உருவாயும் ஆதியாயும்
அந்தமாயும் ஒலியாயும் ஆகம மாயும்
திருவாயும் குருவாயும் சிவனாயும்
செறிந்தவத் துவைப் போற்றி ஆடுபாம்பே! 7

சுட்டிக் காட்ட ஒண்ணாதபாழ் சூனியம் தன்னைச்
சூட்சமதியால் அறிந்து தோடம் அறவே
எட்டிப் பிடித்தோ மென்றானந்த மாகப்பை
எடுத்து விரித்து நின்று ஆடுபாம்பே! 8

எவ்வுயிரும் எவ்வுலகும் ஈன்று புறம்பாய்
இருந்துதிரு விளையாட்டு எய்தியும் பின்னர்
அவ்வுயிரும் அவ்வுலகும் ஆகியும் நின்ற
ஆனந்த வெள்ளங்கண்டு ஆடுபாம்பே ! 9

குரு வணக்கம்

சாற்று முடல் பொருள் ஆவி தத்த மாகவே
தானம் வாங்கி நின்ற எங்கள் சற்குருவினைப்
போற்றிமனம் வாக்குக்காயம் மூன்றும் பொருந்தப்
புகழ்ந்து புகழ்ந்து நின்று ஆடுபாம்பே ! 10

பொய் மதங்கள் போதனைசெய் பொய்க்குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்
மெய்ம் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
மெய்க் குருவின் பதம் போற்றி ஆடுபாம்பே ! 11

வேதப் பொருள் இன்னதென்றும் வேதம் கடந்த
மெய்ப் பொருளைக் கண்டு மனம் மேவி விரும்பிப்
போதப் பொருள் இன்னதென்றும் போதனைசெய்யும்
பூரண சற்குருதாள் கண்டு ஆடுபாம்பே ! 12

உள்ளங்கையிற் கனி போல் உள்ள பொருளை
உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவைக்
கள்ள மனந்தன்னைத் தள்ளிக் கண்டுகொண்டு அன்பாய்க்
களித்துக் களித்து நின்று ஆடுபாம்பே ! 13

அங்கையிற் கண்ணாடிபோல ஆதி வத்துவை
அறிவிக்கும் எங்கள் உயிரான குருவை
சங்கையறச் சந்ததமும் தாழ்ந்து பணிந்தே
தமனியப் படம் எடுத்து ஆடுபாம்பே ! 14

காயம் நிலை அக்கையைக் கண்டு கொண்டு பின்
கற்ப நிலை யுள்ளிற் கொண்டு எக்காலமும் வாழும்
தூயநிலை கண்ட பரிசுத்த குருவின்
துணையடி தொழுது நின்று ஆடுபாம்பே ! 15

கூடுவிட்டுக் கூடுபாயும் கொள்கையுடைய
குருவின் வல்லபம் எவர் கூற வல்லவர்
வீடுபெறும் வகையை மென்மேலுங் காட்டும்
மெய்க்குருவைப் பணிந்து நின்று ஆடுபாம்பே ! 16

அட்ட திக்கும் அண்ட வெளியான விடமும்
அடக்கிய குளிகையோடு ஆடி விரைவாய்
வட்டமிட்டு வலம் வரும் வல்லகுருவின்
மலரடி தஞ்சம் என்று ஆடுபாம்பே ! 17

கற்பகாலம் கடந்தாதி கர்த்தா வோடும்
கடமழி யாது வாழுங் காரணக் குரு
பொற்பதமே தஞ்சமென்று போற்றுதல் செய்து
பூரண சிந்தையோடு ஆடுபாம்பே ! 18

வச்சிரத்திற் கோர் பழுது வாய்க்கு மாயினும்
வல்லுடம்புக் கொருகுறை வாய்த்திடாது
மெச்சுகட முள்ள எங்கள் வேத குருவின்
மெல்லடி துதித்து நின்று ஆடுபாம்பே ! 19

பாம்பின் சிறப்பு

நாதர்முடி மேல் இருக்கும் நாகப் பாம்பே !
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே !
பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே !
பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே ! 20

வளைபுகும் போதே தலை வாங்கும் பாம்பே !
மண்டல மிட்டுடல் வளை வண்ணப் பாம்பே !
தளைக்கஞ்சி நின்றிடும் சத்தியப் பாம்பே !
தலையெடுத்தே நீ விளையாடு பாம்பே ! 21

குற்றமற்ற சிவனுக்குக் குண்டலமானாய்
கூறுந்திரு மாலினுக்குக் குடையுமானாய்
கற்றைக் குழல் பார்வதிக்குக் கங்கணமானாய்
கரவாமல் உளங்களித்து ஆடுபாம்பே ! 22

மண்டலத்தைத் தாங்குமிக வல்லமை கொண்டாய்
மாயனுக்குப் படுக்கைக்கு வண்ணப் பாயானாய்
கண்டபடை நடுங்கிடக் காட்சியும் பெற்றாய்
கண்ணே செவியாகக் கொண்டாய் ஆடுபாம்பே ! 23

சந்திரனைச் சூரியனைத் தாவித் தீண்டினாய்
சங்கரனுக்கு ஆபரணந் தானுமாகினாய்
மந்திரத்துக் கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்து வளைந்து நின்று ஆடுபாம்பே ! 24

சித்தர் வல்லபம்

எட்டு நாகம் தம்மைக் கையால் எடுத்தே ஆட்டுவோம்
இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம்
கட்டுக்கு அடங்காத பாம்பைக் கட்டி விடுவோம்
கடுவிடந் தன்னைக் கக்கி ஆடுபாம்பே ! 25

ஆதிசேடன் ஆயினுமெம் மங்கையினாலே
ஆட்டி விடுவோ மெங்கள் ஆக்கினைக்குள்ளே:
நீதியோடு மடங்கியே நின்றிடச் செய்வோம்.
நின்ற நிலை தவறாமல் ஆடுபாம்பே ! 26

தூணைச்சிறு தும்பாகத் தோன்றிடச் செய்வோம்
துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச் செய்குவோம்
ஆணைப்பெண்ணும் பெண்ணை ஆணும் ஆகச்
செய்குவோம்.
ஆரவாரித்து எதிராய் நின்று ஆடுபாம்பே. 27

எட்டுமலைகளைப் பந்தாய் எடுத்து எறிகுவோம்
ஏழு கடலையுங் குடித்து ஏப்பமிடுவோம்
மட்டுப் படா மணலையும் மதித்து விடுவோம்
மகராசன் முன்பு நீ நின்று ஆடுபாம்பே. 28

மண்டலமுற்று மெங்கையால் மறைத்து விடுவோம்
வானத்தையுமே வில்லாக வளைத்து விடுவோம்
தொண்டருக்குச் சூனியஞ் சொல்லிக் காட்டுவோம்
தோன்றலுக்கு முன்பு நீ நின்று ஆடுபாம்பே. 29

மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்
முந்நீருள் இருப்பினும் மூச்சடக்குவோம்
தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம்
தார்வேந்தன் முன்புநீ ஆடுபாம்பே. 30

செப்பரிய மூன்றுலகுஞ் செம்பொன் ஆக்குவோம்
செங்கதிரைத் தன்கதிராய் செய்து விடுவோம்
இப்பெரிய உலகத்தை இல்லாமற் செய்வோம்
எங்கள் வல்லபங் கண்டு நீ ஆடுபாம்பே ! 31

வேதன் செய்த சிருட்டிகள் போல வேறு செய்குவோம்
வேதனையும் எங்கள் கீழே மேவச் செய்குவோம்
நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்
நாங்கள் செய்யும் செய்கை இதென்று ஆடுபாம்பே! 32

அறுபத்து நாலு கலையாவும் அறிந்தோம்
அதற்கு மேல் ஒரு கலையான தறிந்தோம்
மறுபற்றுச் சற்றுமில்லா மனமும் உடையோம்
மன்னனே ஆசான் என்று ஆடுபாம்பே ! 33

சீறுபுலி யானையாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்லுவோம்
வீறுபெருங் கடவுளை எங்களுடனே
விளையாடச் செய்குவோமென்று ஆடுபாம்பே! 34

வாசுகியை ஒரு பக்கம் மன்ன நிறுத்தி
மகத்தான பதுமனை மறுபக்கம் வைத்தே
தேசுலவு தக்கனைத்தன் திக்கினிற் சேர்ந்து
செய்யபது மனைக்கொள்ளும் சித்தனாரே ! 35

அனந்தனை யொருபக்கமாக நிறுத்தி
அதன் பக்கங்குளிகனை யண்டச் சேர்த்துக்
கனங்கொண்ட கார்க்கோடகன் காணக் காட்டுங்
கடுஞ்சங்க பாலனைத்தான் சித்தனாரே. 36

அட்டதிக்குஞ் சக்கரங்களாகக் கீறி
அக்கோண நிலைகளி லக்கரஞ் சேர்த்துத்
திடமுடன் மந்திரத்தைச் செபித்து நில்லும்
சித்தந்தடு மாறாதீர் சித்தனாரே ! 37

அட்டதிக்குஞ் சக்கரங்கள் அமைத்து விட்டோம்
அவ்வவற்றில் சக்கரங்கள் அமைத்துவிட்டோம்
எட்டுநாகம் இருக்கின்ற இடத்தில் விட்டோம்
இனியென்ன செய்வம் சொல்லும் சித்தனாரே! 38

நடுவாக ஆதிசேடன் தன்னை நாட்டும்
நான்கு திக்கும் மந்திரித்த நீறுதூவும்
கடுவிடங் கக்க வேயக் கட்செவிகளைக்
கையிலேடுத் தாடுங்கள் சித்தானரே! 39

பொருளாசை விலக்கம்

நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்
நடுவன்வரும் பொழுது நாடி வருமோ?
கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ?
கூத்தன் பதங் குறித்து நின்று ஆடுபாம்பே ! 40

யானை சேனை தேர்பரி யாவும் அணியாய்
யமன் வரும் போது துணையாமோ அறிவாய்
ஞானஞ்சற்றும் இல்லாத நாய்கட் குப்புத்தி
நாடிவரும்படி நீ நின்று ஆடுபாம்பே ! 41

மாணிக்கமா மணிமுடி வாகு வலயம்
மார்பில் தொங்கும் பதக்கங்கள் மற்றும் பணிகள்
ஆணிப்பொன் முத்தாரம் அம்பொன் அந்தக் கடகம்
அழிவான பொருளென நின்று ஆடுபாம்பே ! 42

மாடகூடமாளிகைகள் வண்ண மண்டபம்
மதில்சூழ்ந்த அரண்மனை மற்றும் உள்ளவை
கூடவாரா வென்று அந்தக் கொள்கை அறிந்தோர்
குலவாமல் வெறுப்பாரென்று ஆடுபாம்பே ! 43

மலைபோன்ற செம்பொற்குவை வைத்தி ருப்பவர்
மறலிதான் வருகையில் வாரிச்செல்வரோ?
அலையாமல் அகத்தினை அத்தன் பால்வைத்தோர்
அழியார்என் றேநீ துணிந்து ஆடுபாம்பே! 44

பஞ்சணையும் பூவணையும் பாய லும்வெறும்
பாழ்சுடு காடதிலே பயன் பெறுமோ?
மஞ்சள்மணம்போய்ச்சுடுநாறு மணங்கள்
வருமென்று தெளிந்துநின்று ஆடுபாம்பே! 45

முக்கனியுஞ் சர்க்கரையும் மோதகங்களும்
முதிர்சுவைப் பண்டங்களும் முந்தி உண்டவாய்
மிக்க உயிர் போன பின்பு மண்ணை விழுங்க
மெய்யாகக் கண்டோம் என்று ஆடுபாம்பே! 46

வண்ணப்பட்டும் வாசனையும் வாய்த்த கோலமும்
வண்கவிகை ஆலவட்டம் மற்றுஞ் சின்னமும்
திண்ணமுடன் யமபுரஞ் செல்லுங் காலத்தில்
சேரவர மாட்டாவென்று ஆடுபாம்பே! 47

மக்கள் பெண்டிர் சுற்றமரு மக்கள் மற்றவர்
மாளும்போதுகூட அவர் மாள்வ தில்லையே
தக்க வுலகனைத்தையும் தந்த கர்த்தனைத்
தாவித்தாவித் துதித்துநின்று ஆடுபாம்பே 48

கானலைமான் நீரெனவே கண்டு செல்லல்போல்
காசினிவாழ் வினைமூடர் கண்டு களிப்பார்
மேனிலை கண்டார்கள் வீணாய் வீம்பு பேசிடார்
மெய்யன்பதம் நாடுவாரென்று ஆடுபாம்பே! 49

பெண்ணாசை விலக்கம்

வெயில்கண்ட மஞ்சள் போன்ற மாதர் அழகை
விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்
ஒயில்கண்டே இலவுகாத்து ஓடும் கிளிபோல்
உடல்போனால் ஓடுவாரென்று ஆடுபாம்பே! 50

செண்டுமுலை வண்டுவிழி கொண்ட தோகையை
சித்தப்பால் விழுங்கிய சீயென்று ஒறுத்தோம்
குண்டுகட்டெ ருமையேறுங் கூற்றுப் பருந்தைக்
கொன்று தின்று விட்டோம் நாம் என்று ஆடுபாம்பே! 51

வட்டமுலையென்று மிக வற்றுந்தோலை
மகமேரு என்று உவமை வைத்துக் கூறுவார்
கெட்ட நாற்ற முள்ள யோனிக் கேணியில் வீழ்ந்தார்
கெடுவார் என்றே நீர் துணிந்து ஆடுபாம்பே! 52

மலஞ்சொரி கண்ணைவடி வாளுக்கொப்பாக
வருணித்துச் சொல்வார் மதி வன்மை இல்லாதார்
குலநலம் பேசுகின்ற கூகை மாந்தர்கள்
கும்பிக்கே இரையாவர் என்று ஆடுபாம்பே! 53

சிக்குநாறுங் கூந்தலையே செழுமை மேகமாய்
செப்புவார் கொங்கைதனைச் செப்புக் கொப்பதாய்
நெக்கு நெக்கு உருகிப் பெண்ணை நெஞ்சில்
நினைப்பார்
நிமலனை நினையார் என்று ஆடுபாம்பே ! 54

நாறிவரும் எச்சில்தனை நல்லமு தென்றும்
நண்ணுஞ்சளி நாசிதனை நற்கு மிழ்என்றும்.
கூறுவார்கள் புத்தியில்லாக்கூகை மாந்தர்கள்
கோன் நிலையை அறியார் என்று ஆடுபாம்பே ! 55

மயில்என்றும் குயில்என்றும் மாணிக்கம் என்றும்
மானேயென்றும் தேனேயென்றும்வான்அமுதென்றும்
ஒயிலான வன்னமயிற் கொத்தவ ளென்றும்
ஓதாமற் கடிந்தோம் என்று ஆடுபாம்பே ! 56

மின்னற்கொடி யென்றுஞ்சோதி விளக்கம் என்றும்
மெல்லியென்றும் வல்லியென்றும் மேனகையென்றும்
கன்னற்கட்டி யென்றுஞ் சீனிக் கற்கண்டு என்றும்
கழறாமல் கடிந்தோம் என்று ஆடுபாம்பே ! 57

பூவையென்றும் பாவையென்றும் பொன்னேயென்றும்
பூத்திருவே என்றும் என்றன் பொக்கிசம் என்றும்
கோவையென்றுங் கோதையென்றுங் கோகிலம் என்றும்
கூறாமல்து றந்தோம்நாம் என்று ஆடுபாம்பே ! 58

மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்
மல்கும்புழுக் கூட்டின்மேல் வண்ணத்தோல் என்றும்
சலக்குழிக் குள்ளே நாற்றஞ்சார்ந்த சேறென்றும்
தான் அறிந்து தள்ளினோம் என்று ஆடுபாம்பே ! 59

உடலின் குணம்

ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே
உதிரப்பு னலினிலே உண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் அவர் பண்ணும் பாண்டம்
வறையோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே ! 60

இருவர்மண் சேர்த்திட ஒருவர் பண்ண
ஈரைந்து மாதமாய் வைத்த தூளை
அருமையாய் இருப்பினும் அந்த தூளை
அரைக் காசுக்கு ஆகாதென்று ஆடுபாம்பே ! 61

பரியாசம் போலவே கடித்த பாம்பு
பலபேர் அறியவே மெத்த வீங்கிப்
பரியாரம் ஒருமாது பார்த்த போது
பையோடே கழன்றதென்று ஆடுபாம்பே ! 62

சீயுமல முஞ்செறி செந் நீரும் நிணமும்
சேர்ந் திடுதுர் நாற்றமுடைக் குடம் அது உடைந்தால்
நாயும்நரி யும்பெரிய பேயுங்கழுகும்
நமதென்றே தின்றிடும் என்று ஆடுபாம்பே ! 63

நீரில்எழும் நீர்க்குமிழி நிலை கெடல்போல
நில்லாது உடல் நீங்கிவிடும் நிச்சயம் என்றே
பாரிற் பல உயிர்களைப் படைத்த வன்தனைப்
பற்றவேநீ பற்றித் தொடர்ந்து ஆடுபாம்பே ! 64

நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங் கழுவினும் அதன் நாற்றம் போமோ?
கூறும் உடல் பலநதி யாடிக் கொண்டதால்
கொண்ட மலம் நீங்காதென்று ஆடுபாம்பே ! 65

காய்த்த மரம் அதுமிக்க கல்லடி படும்
கன்ம வினை கொண்ட காயம் தண்டனை பெறும்
வாய்த்த தவம் உடையவர் வாழ்பவர் என்றே
வத்துத் திருவடி தொழுது ஆடுபாம்பே ! 66

பேசரிய நவவாயில் பீற்றல் துருத்தி
பெருங்காற்றுள் புகுந்ததாற் பேச்சுண் டாச்சே
ஈசன் நிலை அறியாருக்கு இந்தத் துருத்தி
எரிமண்ணிற்கு இரையாம் என்று ஆடுபாம்பே ! 67

மரப்பாவை போலவொரு மண்ணுருச் செய்து
வளமான சீவன் என்னுஞ் சூத்திரம் மாட்டித்
திரைக்குள் இருந்தசைப்போன் தீர்ந்த பொழுதே
தேகம் விழும்என்று தெளிந்து ஆடுபாம்பே ! 68

தசநாடி தசவாயு சத்த தாது
சார்ந்தமரக் கப்பல் அது தத்தி விழுமே
இசைவான கப்பலினை ஏக வெள்ளத்தில்
எந்நாளும் ஓட்டத் துணிந்து ஆடுபாம்பே ! 69

அகப்பற்று நீக்கல்

தாமரையின் இலையிலே தண்ணீர் தங்காத
தன்மைபோல சுகத்தாசை தள்ளி விட்டெங்கும்
தூமணியாய் விளங்கிய சோதி பதத்தைத்
தொழுது தொழுது தொழுது ஆடுபாம்பே ! 70

கள்ளங்கொலை காமமாதி கண்டித்தவெல்லாம்
கட்டறுத்து விட்டு ஞானக் கண்ணைத் திறந்து
தெள்ளிதான வெட்டவெளி சிற் சொரூபத்தைத்
தேர்ந்து பார்த்துச் சிந்தை தெளிந்து ஆடுபாம்பே! 71

சொல்லும்புளி யம்பழத்தின் தோடு போலவே
சுற்றத்திருந்தாலும் அவர் சொந்தங்கள் அற்று
நில்லுமனமே நீபர நின்மலத்திலே
நின்றுணைதான் வெறும் பாழென்று ஆடுபாம்பே! 72

சேற்றில்திரி பிள்ளைப்பூச்சி சேற்றை நீக்கல்போல்
தேசத்தொடு ஒத்து வாழ்வார் செய்கை கண்டபின்
சாற்றுபர வெளிதனை சாரும் வழியே
தானாக்க வேணுமென்று ஆடுபாம்பே ! 73

எண்ணெய்க்குந் தண்ணீர்க்குந் தொந்தம்இல்லா வாறுபோல்
எப்போதும் இப்புவியில் எய்த வேண்டும்
கண்ணுக்குக் கண்ணானவொளி கண்டுகொள்ளவே
கட்டறுத்து வாழ்ந்திட நின்று ஆடுபாம்பே ! 74

'கக்கிவிட்ட சோறுகறி கந்த மூலங்கள்
கண்களுக்குச் சுத்தமான காட்சி போலவே
சிக்கிக்கொண்ட சகத்தினை சீயென் றொறுத்துச்
சீர்பாதங் காணத் தெளிந்து ஆடுபாம்பே ! 75

கோபம் என்னும் மதயானை கொண்ட மதத்தைக்
கூர்கொள் யுத்தி அங்குசத்தால் கொன்று
விட்டேங்காண்
தீபமென்னுஞ் சிற்சொரூப செய்ய பொருளைச்
சேர்ந்துறவு கொண்டோம் என்று ஆடுபாம்பே! 76

நித்தியமென்னு மலையில் நின்றுகொண்டோம் யாம்
நினைத்தபடியே முடித்து நின்மல மானோம்
சத்தியமாய் எங்கள் கடந்தான் அழியாதே
சந்ததமும் வாழ்வோம் என்று ஆடுபாம்பே! 77

மனமென்னும் குதிரையை வாகனமாக்கி
மதியென்னும் கடிவாளம் வாயினில் பூட்டிச்
சினமென்னும் சீனியின் மேற்சீராய் ஏறித்
தெளிவிடம் சாரிவிட்டு ஆடுபாம்பே! 78

ஆசையென்னுஞ் செருப்பின் மேல் அடியை வைத்தே
ஆங்கார முட்காட்டை அறவே மிதித்தே
காசையெனுந் துர்க்குணத்தில் கனலைக் கொளுத்திக்
காலாகாலங் கடந்தோம் என்று ஆடுபாம்பே 79

காலன் எனுங் கொடிதான கடும்ப கையை நாம்
கற்பமெனும் வாளினாலே கடிந்து விட்டோம்
தாலமதிற் பிறப்பினைத் தானும் கடந்தோம்
தற்பரங் கண்டோம் என்று ஆடுபாம்பே ! 80

தேனில் வீழ்ந்த ஈயைப்போல சிந்தை குலைந்து
திகையாமல் சிற்சொரூப தெரிச னைக்ண்டு
வானிற் பறந்திடதூத வான்மணி தீர்ந்து
வாயிற் போட்டேக நீ நின்று ஆடுபாம்பே ! 81

தூக்கியநற் பாதங்கண்டேன் சோதியுங் கண்டேன்
சுத்தவெளிக்குள்ளேயொரு கூத்தனைக் கண்டேன்
தாக்கிய சிரசின் மேல் தைத்த பாதம்
சற்குருவின் பாதம் என்று ஆடுபாம்பே! 82

ஆலடிப் பொந்தினிலே வாழ்ந்த பாம்பே
அரசடிப் பொந்தினிலே புகுந்து கொண்டாய்
வாலடி தன்னிலே பார்த்துப் பார்த்து
வாங்கியே தூங்கிநின்று ஆடு பாம்பே! 83

நாலு தெருவினிலே நாலு கம்பம்
நடுத் தெருவினிலேயோர் பொன்னுக் கம்பம்
போலும் விளங்குபொன்னுக் கம்பத்தினுக்கே
பூமாலை துடியே நின்று ஆடு பாம்பே! 84

ஆழிபெயர்ந்தாலும் மேருமட்டே அலையும்
அடியோடு பெயர்ந்தாலும் அன்றிக் கால
ஊழிபெயர்ந்தாலும் மதி உன்னைப் படிக்கே
உறுதி பெயராது நின்று ஆடுபாம்பே ! 85

வாயுவினை இரையாக வாங்கி உண்டே
வருடிக்கு நீரினை வாயுள் மடுத்தே
தேயுபிறை குளிர்காய்ந்து வெட்ட வெளியில்
திகைப்புற சேர்ந்துநின்று ஆடு பாம்பே ! 86

மாசில்கதி வளையிலே மண்டலம் இட்டே
மதியான பெரும்பட மடலை விரித்தே
ஆசில்பரா பரமான ஆதி பாதத்தை
அடுத்தடுத்தே துதித்து ஆடு பாம்பே! 87

காடுமலை நதிபதி காசி முதலாய்க்
கால்கடுக்க ஓடிற்பலன் காண லாகுமோ?
வீடுபெறும் வழிநிலை மேவிக் கொள்ளவே
வேதாந்தத் துறையில் நின்று ஆடு பாம்பே! 88

எள்ளளவும் அன்பகத்தில் இல்லா தார்முத்தி
எய்துவது தொல்லுலகில் இல்லை யெனவே
கள்ளப்புலன் கட்டறுத்துக் கால காலனைக்
கண்டு தொழுதே களித்து ஆடு பாம்பே! 89

சூரியனைக் கண்டபனி தூர ஓடல் போல்
சொந்தபந்தஞ் சிந்தபரி சுத்த தலத்தில்
ஆரியனைக் கண்டுதரி சித்தே யன்புடன்
அகலாமல் பற்றித் தொடர்ந்து ஆடுபாம்பே! 90

காந்தம்வலி இரும்புபோல் காசில் மனத்தைக்
காட்சியான வத்துவுடன் கலக்க சேர்த்து
சாந்தமுடன் தோண்டியும் தாம்பும் போல
சலியாமல் தொடர்ந்து நின்று ஆடுபாம்பே! 91

உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி
உலகத்தின் மூடர்களுக் குண்டோ உணர்ச்சி?
புளியிட்ட செம்பிற்குற்றம் போமா? அஞ்ஞானம்?
போகாது மூடருக்கென்று ஆடுபாம்பே! 92

திரளான போரில்ஊசி தேடல் போல்முத்தி
சிக்காது தேசாசார தேசிகர் தம்மால்
அருளான மூலகுரு ஐயர் செயலால்
ஆனந்தங் கண்டோம் என்று ஆடுபாம்பே! 93

ஏட்டுச்சுரைக்காய் கறிக்கிங் கெய்திடாது போல்
எண்திசை திரிந்துங் கதி எய்தல் இல்லையே
நாட்டுக்கொரு கோயிற்கட்டி நாளும் பூசித்தே
நாதன்பாதம் காணார்கள் என்று ஆடுபாம்பே! 94

தன்னையறிந்து ஒழுகுவோர் தன்னை மறப்பார்
தன்னை யறியாதவரே தன்னைக் காட்டுவார்
பின்னையொரு கடவுளைப் பேண நினையார்
பேரொளியைப் பேணுவார் என்று ஆடுபாம்பே! 95

பாலிற்சுவை போலும் எங்கும் பாய்ந்த ஒளியைப்
பற்றுப்பொன் பற்றவைத்த பான்மைபோலவே
காலிற்சுழு முனைநின்று கண்டு கொண்டு
களித்துக் களித்து நின்று ஆடுபாம்பே! 96

தேக்கெடுத்தே ஓடும்வானத் தேனை உண்டபின்
தேகபந்தம் கொண்டனம் இத்தேக வாழ்வினை
ஒக்காளமென்று எண்ணிமிகு ஓகையுடன் நீ
உள்ளம் தெளிந்து நின்று ஆடுபாம்பே! 97

சதுர்வேதம் ஆறுவகை சாத்தி ரம்பல
தந்திரம் புராணங்கலை சாற்றும் ஆகமம்
விதம்வித மானவான வேறுநூல்களும்
வீணான நூல்களே என்று ஆடுபாம்பே! 98

சமயபேதம் பலவான சாதி பேதங்கள்
சகத்தோர்க்கே அல்லாதுசற் சாதுக் களுக்கோ?
சிமயத்தி லேறினபேர் சித்தம் மாறுமோ?
சித்தர்சித் தாந்தந்தேர்ந்து ஆடுபாம்பே! 99

பூசைசெய்த தாலேசுத்த போதம் வருமோ?
பூமிவலஞ் செய்ததனாற் புண்ணியம் உண்டோ?
ஆசையற்ற காலத்திலே ஆதி வத்துவை
அடையலாம் என்று துணிந்து ஆடுபாம்பே! 100

மூலவேர் அறிந்து கொண்டால் மூன்று உலகமும்
முன்பாகவே கண்டு நித்ய முத்தி சேரலாம்
சாலவேர் அறிந்ததாலே தான் பயன் உண்டோ?
சகத்தைப்பொய் யென்று தெளிந்து ஆடுபாம்பே! 101

சகத்தனாதி யென்றிடாது தான் அனாதியார்
சமைந்த தென்று உரைப்பார்கள் சத்தை அறியார்
மகத்துவ நிலைகற்பவன்மை யல்லாது
மற்றும் வன்மை இல்லையே என்று ஆடுபாம்பே! 102

ஆயிரத் தெட்டிதழ் வீட்டில் அமர்ந்த சித்தன்
அண்டம் எல்லாம் நிறைந்திடும் அன்புச் சித்தன்
காயமில்லாது ஓங்கிவளர் காரணச் சித்தன்
கண்ணுள் ஒளி யாயினான் என்று ஆடுபாம்பே! 103

நாற்பத்து முக்கோண நிலை நாப்ப ணதாக
நாடும் அக்க ரசொரூப நாய கன்தனை
மேற்படுத்திக் கொண்டால் அந்த மேலுல கெலாம்
மெல்லடிக்குத் தொண்டேயாம் என்று ஆடுபாம்பே! 104

கண்டவர்கள் ஒருக்காலும் விண்டி டார்களே
விண்டவர்கள் ஒருக்காலும் கண்டி டார்களே!
கொண்டகோலம் உள்ளவர்கள் கோன் நிலைகாணார்
கூத்தாடிக் கூத்தாடியே நீ ஆடுபாம்பே! 105

ஆறுகலைக் குச்சுக்குள்ளே ஆடும் ஒருவன்
அயல்வீடு போகுமுன்னே அரண்கோ லிக்கொள்ளு?
வேறுபட்டால் அவன் தனைமீட்டல் அரிதே
மேவிமுன்னே விடாது கொண்டு ஆடுபாம்பே! 106

எண்ணரிய புண்ணியங்கள் எல்லாம் செய்தும்என்?
ஏகன் அடி நெஞ்சுமதில் எண்ணா விடிலே?
பண்ணரிய தவப்பயன் பத்தி இல்லையேல்
பாழ்படும் என்று துணிந்து ஆடுபாம்பே! 107

எவ்வுலகுஞ் சொந்தமதாய் எய்தும் பயன் என்?
எங்கள் ஆதி பதாம்புயம் எண்ணாக் காலையில்?
இவ்வுலக வாழ்வுதானும் இன்றே அறுமென்று
எண்ணிக் கர்த்தன் அடிநினைந்து ஆடுபாம்பே! 108

மணக்கோலங் கொண்டு மிக மனம் மகிழ்ந்துமே
மக்கள் மனை சுற்றத்தோடு மயங்கி நின்றாய்
பிணக்கோலம் கண்டுபின்னுந் துறவா வீட்டில்
பிறப்புக்கே துணையாம் என்று ஆடுபாம்பே! 109

பிறப்பையும் இறப்பையும் அறுத்து விடயான்
பெருமருந்து ஒன்று சொல்வேன் பெட்புடன் கேளாய்
திறப்புடன் மனப்பூட்டுஞ் சிந்தைக் கதவும்
திறந்திடும் வகையறிந்து ஆடுபாம்பே! 110

இறந்தவர் ஐவர் அவர் இட்டமானவர்
எய்தும் அவர் இறந்தார் என்று எல்லவர்க்குஞ் சொல்
மறந்தவர் ஒருவர் என்றே மண்ணினில் உள்ளோர்
வகையறிந் திடவே நின்று ஆடுபாம்பே! 111

எண்சீர் விருத்தம்

ஆகார முதலிலே பாம்ப தாக
ஆனந்த வயலில் படம்விரித்தே
ஊகார முதலிலே யொத்து ஒடுங்கி
ஓடி வகாரத்தின் நாஸ்வநீட்டிச்
சீகோரங் கிடந்தோர் மந்திரத்தைச்
சித்தப் பிடாரனார் போதஞ் செய்ய
மாகாரப் பிறப்பையும் வேர் அறுத்து
மாயபந்தம் கடந்தோம் என்று ஆடுபாம்பே! 112

தந்திரம் சொல்லுவார் தம்மை அறியார்
தனிமந்திரஞ் சொல்லுவார் பொருளை அறியார்
மந்திரம் செபிப்பார்கள் வட்ட வீட்டினுள்

மதிலினைச் சுற்றுவார் வாயில் காணார்
அந்தரம் சென்றுமே வேர் பிடுங்கி
அருள் என்னும் ஞானத்தால் உண்டை சேர்த்தே
இந்த மருந்தினைத் தின்பீராகில்
இனிப் பிறப்பு இல்லையென்று ஆடுபாம்பே! 113

களிமண்ணினால் ஒரு கப்பல் சேர்த்தே
கனமான பாய்மரங் காண நாட்டி
அளிபுலந் தன்னையே சுக்கானாக்கி
அறிவென்னும் ஆதாரச் சீனி தூக்கி
வெளியென்னும் வட்டத்தே யுள்ளடக்கி
வேதாந்தக் கடலினை வெல்ல வொட்டித்
தெளிவுறு ஞானியார் ஓட்டுங் கப்பல்
சீர்பாதஞ் சேர்ந்தது என்று ஆடுபாம்பே! 114

உள்ளத்துக் குள்ளேயே உணர வேண்டும்
உள்ளும் புறம்பையும் அறிய வேண்டும்
மெள்ளக் கனலை எழுப்ப வேண்டும்
வீதிப் புனலிலே செலுத்த வேண்டும்
கள்ளப் புலனைக் கடிந்து விட்டு
கண்ணுக்கு மூக்கு மேற்காண நின்று
தெள்ளு பரஞ்சோதி தன்னைத் தேடி
சீர்பாதம் கண்டோம் என்று ஆடுபாம்பே ! 115

ஓங்காரக் கம்பத்தின் உச்சி மேலே
உள்ளும் புறம்பையும் அறியவேண்டும்
ஆங்காரக் கோபத்தை அறுத்து விட்டே
ஆனந்த வெள்ளத்தைத் தேக்கிக் கொண்டே
சாங்காலம் இல்லாமல் தானு வோடே
சட்ட திட்டமாய்ச் சேர்ந்து சாந்தமாகத்
தூங்காமல் தூங்கியே சுகம் அடைந்து
தொந்தோம் தொந்தோம் என்று ஆடுபாம்பே! 116

விரகக் குடத்திலே பாம்படைப்போம்
வேதாந்த வெளியிலே விட்டே ஆட்டுவோம்
கரணங்களைப் பிடுங்கி இரை கொடுப்போம்
காலக் கடுவெளி நின்று ஆட்டுவிப்போம்
துரகந் தனிலேறித் தொல் உலகெங்கும்
சுற்றி வலம்வந்து நித்தசூட்சுமங் கண்டும்
உரையற்ற மந்திரஞ் சொல்லி மீட்போம்
ஒரு நான்கும் பெற்றோம் என்று ஆடுபாம்பே! 117

காயக் குடத்திலே நின்ற பாம்பைக்
கருணைக் கடலிலே தியங்க விட்டு
நேயச் சுழுமுனை நீடு பாய்ச்சி
நித்யமான வத்துவை நிலைக்க நாடி
மாயப் பெருவெளி தன்னில் ஏறி

மாசற்ற பொருளினை வாய்க்கத்தேடி
ஆயத்துறை கடந் தப்பாற்பாழின்
ஆனந்தஞ் சேர்ந்தோம் என்று ஆடுபாம்பே! 118

மூலத் தலத்திலேநின்ற கருத்தை
முற்றுஞ் சுழுமுனை தன்னில் ஊடே
மேலத் தலத்திலே விந்து வட்டம்
வேலை வழியிலே மேவி வாழும்
பாலத் திருத்தாய்க் கருணை யதனால்
பரகதி ஞான சொரூபமாகி
ஆல சயனத்து மாலுடன் நின்றே
ஆனந்தஞ் சேர்ந்தோம் என்று ஆடுபாம்பே! 119

புலன் ஐந்து வீதியில் வையாளி பாயும்
புரவி யெனும் மனத்தை ஒருமைப் படுத்தி
மலபந்த வுலகங் கடந்ததாலே
மன்னுகுரு பாதத்தின் நிலையை நாடித்
தலம் ஐந்து பூலோகங் கடந்ததாலே
சந்திர மண்டலமுங் கடந்த தாகும்
அலமந்து பூலோகக் கடலை நீக்கி
ஆனந்த மாகிநின்று ஆடு பாம்பே! 120

குருவென்னும் ஆசானின்உருவெ டுத்துக்
குறியான ஞானத்துப் பாக்கியாக்கி
அருளென்னும் அருளையே உண்டையாக்கி
ஆனந்தமாகவே அதைக் கடந்தே
மருளென்னும் மாதர்மன நெறியைத் தொட்டு
வாங்காமல் எரித்திட நெட்டையிட்டுப்
பருவளைக் குள்ளேயே பட்டதென்றே
பற்றானைப் பற்றிநின்று ஆடுபாம்பே! 121

கன்னான் குகையிலே கான்மறிப்போம்
கருமான் உலையிலே தீயை மூட்டுவோம்
சொன்னார் தலையிலே பொன்னை ஆக்குவோம்
சுருதி யருங்கலவி ஒப்பஞ் செய்வோம்
மின்னார்கள் பாசத்தை விட்டே எரிப்போம்
மெய்ப்பொருள்குறிகண்டு விருப்பை அடைவோம்
பன்னாதே பன்னாதே சும்மா விருந்து
பராபரஞ் சேர்ந்தோம் என்று ஆடுபாம்பே! 122

சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்
சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்
வீதிப் பிரிவினிலே விளையாடிடுவோம்
வேண்டாத மனையினில் உறவு செய்வோம்
சோதித் துலாவிலே தூங்கி விடுவோம்

சுகமான பெண்ணையே சுகித்திருப்போம்
ஆதிப் பிரமர்கள் ஐந்து பேரும்
அறியார்கள் இதையென்று ஆடுபாம்பே! 123

நெட்டெழுத்து அதனிலே நிலைபிடித்து
நீங்கா எழுத்திலே வாலை முறுக்கி
விட்டு அவ் எழுத்திலே படம் விரித்து
விண்ணின் வழியிலே மேவி யாடி
பட்ட எழுத்தையும் பதிந் திருப்போம்
பன்னிரண்டா மெழுத்தில் பன்னிக் கூடித்
திட்டமுடன் எமக்கருள் தேசிகனார் தம்
சீர்பாதஞ் சேர்ந்தோம் என்று ஆடுபாம்பே! 124

ஊசித்துளைக் குடத்தினில் பாம்பை அடைப்போம்
உலகெலாம் சுற்றியே உலாவி வருவோம்
மாசுள்ள பிறவியை மறந்திருப்போம்
மனமொத்த வெளியிலே விட்டே ஆட்டுவோம்
மாசுப் புலன்களை இரைகொ டுப்போம்
மனமுற்ற உச்சியில் ஏறி ஆடுவோம்
பேசும் எழுத்தையும் விழுங்கி விடுவோம்
பிறப்பு இறப்பு அற்றோம் என்று ஆடுபாம்பே! 125

ஆணிக் குடத்திலே பாம்படைப்போம்
அக்கினிக் கோட்டை மேல் ஏறிப் பார்ப்போம்
மாணிக்கத் தூணின் மேல் விட்டே ஆட்டுவோம்
மனம்வாக்குக் காயத்தை இரை கொடுப்போம்
நாணிக் கயிற்றையும் அறுத்து விடுவோம்
நமனற்ற நாதன் பதம் நாடியே நிற்போம்
ஏணிப்படி வழிகண்டு ஏறி விடுவோம்
யாரும் இதை அறியார் என்று ஆடுபாம்பே! 126

வடக்குங் கிழக்குமாக நூலை இழைப்போம்
மற்றுஞ் சுழலிலே பாவு பூட்டுவோம்
நடக்கும் வழியினிலே உண்டை சேர்ப்போம்
நடவாவழியினிலே புடவை நெய்வோம்
குடக்குக் கரையினிலே கோலைப் போடுவோம்
கொய்ததை எங்குமே விற்று விடுவோம்
அடக்கியே ஏகத்துள்ளே வைக்கவும் வல்லோம்
ஆதிபதங் கண்டோம் என்று ஆடுபாம்பே! 127

சூத்திரக் குடத்திலே பாம்பை அடைப்போம்
சுழுமுனைக் குள்ளேயே சுகித்திருப்போம்
பாத்திரங் கொண்டுமே பலிஇ ரப்போம்
பத்தெட்டு மூன்று படிகடந்தோம்
ஊத்தைச் சடத்தினைப் புடமே இடுவோம்

உளவன் எமக்குநல் உறுதி சொல்லப்
பார்த்துரை இதன்மெய் பலிக்க எண்ணிப்
பதனம் பதனம் என்று ஆடுபாம்பே! 128

மவ்வக் குடத்திலே பாம்ப டைப்போம்
மணிவட்ட வாசியை வாரி உண்போம்
வவ்வக் குடங்களைத் தள்ளி விடுவோம்
வக்கிர சொப்பனந்த தாண்டி விடுவோம்
பவ்வ வெளியிலே விட்டே ஆட்டுவோம்
பஞ்ச கருவியைப் பலி கொடுப்போம்
சிவ்வுரு வாகியே நின்றோம் என்றே
சீர்பாதம் கண்டு தெளிந்து ஆடுபாம்பே! 129

6

சித்தராஜரும் - பாம்பாட்டிச் சித்தர் சமாதி பீடத்தின் திருப்பணி வளர்ச்சியும்

பதினெட்டுச் சித்தர்களில் கடைசிச் சித்தரான பாம்பாட்டிச் சித்தருக்கு ஜீவ சமாதி கட்டிய அவரது சீடர் பிரம்மானந்த ஸ்ரீசிவப்பிரபாகர சித்தயோகியின் பிரதான சீடரான பிரம்ம ஸ்ரீசித்தர்ராஜசுவாமிகள் தனது குருநாதர் ஸ்ரீபிரபாகர சித்தயோகியின் கட்டளைப்படி விசித்திர ரூபனான பாம்பாட்டிக்குச்சமாதி பீடம் கட்டும் திருப்பணியைச் சித்தர் முறைப்படி விரைந்து செயல்படுத்தி வருகிறார். மிகவும் சீர்கெட்டுக் கிடந்த சமாதியின் இடத்தைச் சீர்ப்படுத்திப் புதர் மண்டிக் கிடந்த அதன் சுற்றுப்புற இடங்களைத் தூய்மை செய்து. சமாதிக்கு எதிரே அமைந்துள்ள கோவிந்தப்பேரி என்ற தெப்பக்குளத்தின் இடிந்து கிடந்த தென்புறச் சுவரை சுமார் ரூ.60ஆயிரம் செலவில் புதுப்பித்துக் கொடுத்துச் சங்கரன்கோவில் மக்கள் நீராடி மகிழ நல்ல வசதி செய்து கொடுத்துள்ளார். இன்னும்

தெப்பக்குளத்தின் மற்ற சுவர்களையும் சீர்ப்படுத்தி மிகவும் நல்ல முறையில் இக்குளத்தை மக்களுக்காக அர்ப்பணிக்க வேண்டுமென்ற உயர்ந்த உள்ளத்தையும் கொண்டுள்ளார். நகர மக்கள் குளிப்பதற்குத் தற்போது இக்குளம்தான் மிகவும் ஏற்றதாக உள்ளது. இதற்காகச் சங்கரன் கோவில் மக்கள் பிரம்ம ஸ்ரீ சித்தராஜ சுவாமிகளுக்குத் தங்களது நன்றியினைப் பரிபூரணமாகக் காட்டியுள் ளார்கள். மேலும், திருக்கோவில் கருவறைப் பணியை செய்வதற்கு முன்பே, சித்த மருத்துவத்துக் கென்று தனிக்கட்டிடம் ஒன்றும், பசிப்பிணியை அகற்ற மிகப்பெரிய அன்னதான மண்டபம் ஒன்றும், தியான மண்டபம் ஒன்றும் கட்டி வருகிறார்கள். கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தே, தன்னை நாடி வருபவர்கள் யாராக இருந்தாலும், இன்முகத்தோடு வரவேற்று அன்ன தானம் கொடுத்த பிறகு தான் பிரம்மஸ்ரீ சித்தராஜ சுவாமி அவர்கள் தனது மற்ற வேலையினைக் கவனிக்கச் செல்வார்கள். இதனால் சங்கரன் கோவில் மக்கள் இவரை அன்னதானப் பிரபு என்ற அடைமொழியிட்டு அழைக்கிறார்கள். கோவிந்தப் பேரி தெப்பக்குளத்திற்கு எதிரேயுள்ள, கோவிந்தப் பேரி என்ற மடத்தினையும் மிக நல்ல முறையில் சீர் செய்து புதிய பொலிவு பெறச் செய்துள்ளார்கள். இவ்வாறு சுவாமி அவர்கள் தனது குருநாதர்

கட்டளையை நிறைவேற்றி வருவதோடு, பொது மக்களுக்கும், சமுதாயத்திற்கும் உதவக்கூடிய நல்ல திருப்பணிகளைச் செய்து, தன்னை ஒரு சிறுத் தொண்டனாக்கிக் கொண்டுள்ளார். தன்னை, தனது சக்தியினை வெளிப்படுத்தாது, தனது குருவின் கட்டளைக்கு உட்பட்டுப் பாம்பாட்டிச் சித்தருக்குத் திருப்பணியைச்செய்து வருகிறார். இத்தகைய கடமை தவறாத தவசீலரைக் காண்பது அரிதிலும் அரிதாகும். இவர் நிழல் கண்டு தொழுதாலே கோடிப் புண்ணியம் நமக்குக் கிட்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

குருநாதர் மேன்மை

தவமதில் சிறந்த சித்த ராஜர்
தன்குரு கட்டளை மொழியேற்று
புனிதனாம் பாம்பாட்டிச் சித்த னுக்கு
மனிதனாய் நின்று கோவில் கட்டுகிறார்
மக்கள் அனைவரும் அதி சயத்தோடு
மண் சுமக்கும் சாமியைப் பார்க்கின்றார்
கலியுகம் தன்னில் சித்த ராஜர்
கலைநய மிக்க திருப் பணியை
கண்ணும் கருத்தாய்ச் செய்ய காசினியோர்
கடவுள் அவதாரமோ இவரென்று திகைக்கின்றார்
பொட்டல் காட்டைப் பொன் மேடாக்கி

பொய்யர் கூட்டக் கொட்ட மடக்கி
தெப்பக் குளத்தைத் தூர்வை செய்து
தென்புறச் சுவரைப் புதிதாய்க் கட்டி
மக்கள் குளிக்க வசதி கூட்டி
மனம் போல் வாழ்வெனச் சிரிக்கின்றார்
பட்டினி என்ற நிலை ஒழித்துப்
பாட்டாளி மக்கள் பசியாற மிகப்
பெரிய அன்னதான மண்டபம் தந்து
பெரியராய் நம் மனதில் நிற்கின்றார்
நித்தம் தொடரும் பல வியாதிகளைச்
சித்த மருத்துவக் கலை மூலம்
மொத்தம் ஒழிக்க நல் மருத்துவ
மனைக் கட்டிட மொன்று தருகின்றார்
இன்னும் பல நற் செயல்களை
இங்கே செய்ய விருக்கின்றார்
என்றும் நம் மனதில் நிலையாய்
நின்று ஆசி கூறிக் காக்கின்றார்.

இந்த சமாதி பீடத் திருப்பணிக்கு இதுவரை பல லட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளன. இன்னும் சுமார் 40 லட்சங்கள் வரை செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கோவில் திருப்பணிக்கு நன்கொடை அனுப்ப விருப்பம் உள்ளவர்கள் கீழே உள்ள விலாசத்திற்கு அனுப்பி வைத்துப் பாம்பாட்டிச் சித்தர் அருள் பெறப் பாம்பாட்டிச் சித்தர் பீடத்தின் சார்பாகக் கேட்டுக்

கொள்கின்றோம். ரூபாய் இரண்டாயிரமும் அதற்கு மேலும் நன்கொடை அளிப்பவர்களின் பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்படும் என்பதனைக் கோவில் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்கொடை அனுப்பும் விலாசம்

மேனேஜிங் ட்ரஸ்டி -

பிரம்ம ஸ்ரீ சித்தராஜ சுவாமிகள்,

பிரம்மானந்த ஸ்ரீ சிவப்பிரபாகர சித்தயோகி
பரமஹம்சர் தர்ம டிரஸ்ட்
ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் சமாதி பீடம்
15-புளியங்குடி ரோடு,
சங்கரன் கோவில் - 627 756
தொலைபேசி - 23131, எஸ்.டி.டி. எண். 04636

7

பாம்பாட்டிச் சித்தர் சமாதியின் பரப்பிரம்ம சிலையின் தத்துவம்

இந்தப் பூமியும் அதில் படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் இறுதியில் ஞானம் என்ற அக்கினியில் வீழ்ந்து வெந்து சாம்பலாகி விடுகின்றன. அவ்வாறு வெந்து சாம்பலானவை அனைத்தும், ஒரே மெய்ப் பொருள் என்ற பரப்பிரம்மத்தோடு கலந்து ஐக்கியமாகி விடுகின்றன். இதிலிருந்து இவ்வுலகத்தில் படைக்கப்பட்ட உயர்திணை, அஃறிணை யாவும் பரப்பிரம்மத்தில் இருந்து தோன்றியவைதான் என்பது தெளிவாகிறது. ஒரே பரப்பிரம்மமே தன்னை பல்வேறு விதமான உருவங்களாகச் சித்தரித்துக் கொள்கின்றது என்பதைப் புரிந்து கொண்டு நாம் வாழும் காலத்தே, ஒருவருக் கொருவர் சண்டை, சச்சரவு ஏதுமின்றி, பொறாமைப்படாமல், துவேசம் பாராட்டாமல்,

வஞ்சனை, கோபம், காமம், பொய் சூது இவற்றை விட்டொழித்து மெய்யோடு வாழ வேண்டும்.

இதுவே, நம்மைப் படைத்திட்ட பரப்பிரம்மத்திற்கு நாம் செலுத்தும் நன்றியாகும். இதனைக் கருத்தில் கொண்டே பாம்பாட்டிச் சித்தர் சமாதி திருக்கோவிலில் பிரம்ம ஸ்ரீசித்தராஜ சுவாமிகள் பரப்பிரம்ம சிலையினைப் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். பாம்பாட்டிச் சித்தர் சமாதியான கருவறைக்குள் இந்தச்சிலை பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. சித்தர் சமாதியான இடத்திற்கு மேலே ஒரே கல்லில் ஈரேழு தலையுடயை நாகச்சிலை செதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நாகத்திற்குள் ஐந்து விதமான தெய்வத் திருவுருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. கிழக்கு முகமாகப் பரந்தாமனும், தெற்குமுகமாகச் சிவனும், சக்தியும் (கோமதி) மேற்குமுகமாகச் சரவண பவ சண்முகனும், வடக்கு முகமாக விநாயகரும் செதுக்கப்பட்டுள்ளனர். அனைத்துவிதமான சக்திகளும் பரப்பிரம்மமான பாம்பாட்டிச் சித்தருக்குள் அடக்கம் என்பதனை விளக்கவே மிகப்பெரிய பாம்பு வடிவச்சிலைக்குள் இவை அனைத்தையும் அடக்கியுள்ளார்கள். குண்டலினி யோகத்தால் ஈரேழு உலகங்களைக் கடந்து பரப்பிரம்ம நிலையடைந்த சித்தர்தான் பாம்பாட்டி என்பதனை விளக்கவே ஈரேழு தலையுடைய நாகம் செதுக்கப்பட்டிருக்கிறது. ஒரே மெய்பொருளான பரப்பிரம்மம் தான் இங்கே பல்வேறு விதமான தெய்வ வடிவங்களில் சிலை உருக்கொண்டு அருள் பாலிக்கிறது என்பதனை

நாம் புரிந்து கொள்ள வேண்டும். முன்பு, அடர்ந்த புதரும், மிகப்பெரிய பாம்புப் புற்றும் மஞ்சணத்தி மரமுமாக இருந்த பாம்பாட்டிச் சித்தர் சமாதி தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது. இன்னும் மிகப்பெரிய முறையில் பாம்பாட்டிச் சித்தர் கருவறை விரிவாக்கம் செய்யப்பட்டு எழில் பெறவிருக்கிறது. சித்தர் சமாதிக்கு வந்து வணங்கிச் செல்லும் பக்தர்களுக்குப் பல்வேறு விதமான நன்மைகளைப் பாம்பாட்டிச் சித்தர் செய்து அருள் பாலிக்கின்றார். வேலை இல்லா தோருக்கு வேலையும் பதவி உயர்வு வேண்டுவோருக்குப் பதவி உயர்வும் குழந்தை இல்லாதோருக்குக் குழந்தையும் மனஅமைதி இல்லாதவர்களுக்குச் சலனமற்ற மனஅமைதியும் இச்சமாதிக்கு வந்து வணங்குவதால் கிடைக்கின்றன என இங்கு வரும் பக்தர்கள் பலர் கூறுகின்றனர். இச்சமாதியின் மண் மற்றும் தீர்த்த நீர் தீராத பல வியாதிகளைத் தீர்ப்பதாகவும், பக்தர்கள் கூறுகின்றனர். சித்தர் சமாதிக்கு நேர் பின்னே பதினெட்டு விளக்கொன்று உள்ளது. இதில் ஓம் என்ற பிரணவ எழுத்து நடுவில் குறிக்கப் பட்டுள்ளது. அந்த பிரணவத்திலிருந்து தோன்றிய மும்மூர்த்திகளைக் குறிக்க திரிசூலம் ஒன்று விளக்கின் உச்சியில் நிற்கின்றது. ஓம் என்ற பிரணவத்தைச் சுற்றி பதினெண் சித்தர்கள் பதினெட்டு விளக்காக காட்சி அளிக்கின்றனர். இந்த விளக்குகளில் எள்ளுப் பொட்டலம் இட்டு நல்லெண்ணெய் விட்டு ஜோதியை உண்டாக்கினால், பக்தர்களின் கோரிக்கைகள் உடனே நிறைவேற்றப்படுகின்றன. முக்கியமாக செவ்வாய்

தோஷம், இராகு, கேது, சனி போன்ற கிரகங்களினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்கிறது. செவ்வாய் தோஷம் உள்ளவர்க்கு விரைவில் திருமணமும் நாகதோஷம் உள்ளவர்கள் கருவறைக்குள் எரிந்து கொண்டிருக்கும் அணையா விளக்குக்கு நல்லெண்ணெய் ஊற்றி வழிபடுவதால் அத்தோஷத்திலிருந்து நிவர்த்தியும் கிடைக்கிறது. இவ்வாறு தன்னை நாடி வரும் அன்பர்களின் தேவைகள் அனைத்தையும் உடனுக்குடன் நிறைவேற்றி அருள் பாலித்து வரும், பாம்பாட்டிச் சித்தர் ஜீவ சமாதி பீடத்தை நோக்கிப் பக்தர்கள் அனைவரும் வந்து சித்தரின் அருளைப் பெற்றுச் செல்லுமாறு, சித்தர் சமாதியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

8

ஓம் ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் அஷ்டோத்திரம்

திருவாய் மலர்ந்தருளியவர் -
பிரம்ம ஸ்ரீ சித்தராஜ சுவாமிகள்

1.	ஓம்	அபிமான ரஹிதாயா	நமஹ
2.	ஓம்	அஷ்டாங்க யோக பல பூஜாய	நமஹ
3.	ஓம்	அபஸ்மார ஹராய	நமஹ
4.	ஓம்	அன்னதான ப்ரபுவே	நமஹ
5.	ஓம்	அசஞ்சலாய	நமஹ
6.	ஓம்	அந்தர் வேதீஸ்வராய	நமஹ
7.	ஓம்	அவ்யயாய	நமஹ
8.	ஓம்	அத்யந்த வினயாய	நமஹ
9.	ஓம்	ஆனந்த சித்தாய	நமஹ
10.	ஓம்	ஆத்ம புவே	நமஹ
11.	ஓம்	ஆக்ருதி பலாய	நமஹ
12.	ஓம்	ஆபத் பாந்தவாய	நமஹ
13.	ஓம்	இகபர சௌபாக்யதாய	நமஹ
14.	ஓம்	இந்த்ரிய ரிபவே	நமஹ
15.	ஓம்	இபராஜ கமனாய	நமஹ
16.	ஓம்	இமயமலை வம்சாய	நமஹ
17.	ஓம்	ஈஸ்வராஸ் ரிதாய	நமஹ
18.	ஓம்	உப வீதினே	நமஹ
19.	ஓம்	உர்வர்யாய	நமஹ
20.	ஓம்	உன்னியப்ப ஸ்வாமினே	நமஹ
21.	ஓம்	உபாந்தே கீர்த்தி தாயே	நமஹ
22.	ஓம்	ஊர்ஜஸ்வதே	நமஹ

23.	ஓம்	ஊர்ம்யாய	நமஹ
24.	ஓம்	ஊருத்வய விநிர் முக்தாய	நமஹ
25.	ஓம்	ஏகோத் ஸாஹாய	நமஹ
26.	ஓம்	ஏதேப் யோ	நமஹ
27.	ஓம்	ஏக ஶ்ரீர்ஷாய	நமஹ
28.	ஓம்	ஐங்கராய	நமஹ
29.	ஓம்	ஜோதிஸே	நமஹ
30.	ஓம்	ஓஜஸ் கராய	நமஹ
31.	ஓம்	கனகமய வஸ மாய	நமஹ
32.	ஓம்	கலாதாராய	நமஹ
33.	ஓம்	கல்யாண குண வர்த்தனாய	நமஹ
34.	ஓம்	காருண்ய ரஸ ஸம்பூர்ணாய	நமஹ
35.	ஓம்	காவ்யா ஸக்தாய	நமஹ
36.	ஓம்	குருணாம் குருவே	நமஹ
37.	ஓம்	கைலாச பர்வத தபஸ்வினே	நமஹ
38.	ஓம்	தபஸ் வினே	நமஹ
39.	ஓம்	தர்மபாலகாய	நமஹ
40.	ஓம்	தந்யாய	நமஹ
41.	ஓம்	தாரித்ரிய நாஸநாய	நமஹ
42.	ஓம்	திவ்ய தேஹாய	நமஹ
43.	ஓம்	தீராய	நமஹ
44.	ஓம்	தீன பந்தவே	நமஹ
45.	ஓம்	நாநாபாய நிக்ருந்த நாய	நமஹ
46.	ஓம்	நித்யாய	நமஹ
47.	ஓம்	நித்யா நந்தாய	நமஹ
48.	ஓம்	நித்யா நுஷ்டான தாயகாய	நமஹ
49.	ஓம்	பக்தி வர்யாய	நமஹ
50.	ஓம்	பரமாத்மனே	நமஹ
51.	ஓம்	பாக்ய தாய	நமஹ
52.	ஓம்	புராண புருஷாய	நமஹ
53.	ஓம்	புண்ய தாயகாய	நமஹ

54.	ஓம்	புஷ்டி தாய	நமஹ
55.	ஓம்	பூஜ்ய காய	நமஹ
56.	ஓம்	பூர்ண மோதாய	நமஹ
57.	ஓம்	மஹநீய குணாத் மனே	நமஹ
58.	ஓம்	மக்த வத்ஸலாய	நமஹ
59.	ஓம்	மஹாத் மனே	நமஹ
60.	ஓம்	மகா தேஜஜே	நமஹ
61.	ஓம்	மருத மலை சஞ்சாராய	நமஹ
62.	ஓம்	மிருகசீருஷ நட்சத்திராய	நமஹ
63.	ஓம்	விசித்ர பல தாயினே	நமஹ
64.	ஓம்	வித்யா வித்யா ஸ்வரூபினே	நமஹ
65.	ஓம்	வித்வத் ப்ரீதிகராய	நமஹ
66.	ஓம்	வேத தத்வஜ்ஞாய	நமஹ
67.	ஓம்	ஸத்ய ஸங்கல்பாய	நமஹ
68.	ஓம்	ஸர்வ பாப ப்ரமநாய	நமஹ
69.	ஓம்	ஸரணாகத போஷணாய	நமஹ
70.	ஓம்	ஸர்வ வியாதி விநாசகாய	நமஹ
71.	ஓம்	ஸர்வை ஸ்வர்ய ப்ரதாய	நமஹ
72.	ஓம்	ஸர்வாய	நமஹ
73.	ஓம்	ஸக்தாய	நமஹ
74.	ஓம்	ஸர்வக்ஞாய	நமஹ
75.	ஓம்	ஸந்தான பல தாயகாய	நமஹ
76.	ஓம்	ஸர்வ கஷ்ட நிவாரணாய	நமஹ
77.	ஓம்	ஸர்வ லக்ஷண ஸம்பந்நாய	நமஹ
78.	ஓம்	ஸாது பூஜிதாய	நமஹ
79.	ஓம்	ஸாஸ்த்ர வித்யா விராரதாய	நமஹ
80.	ஓம்	ஸுவர்ச்சஸே	நமஹ
81.	ஓம்	ஸுந்த ராய	நமஹ
82.	ஓம்	ஸுத்த ஸ்படிக பாஸ்கராய	நமஹ
83.	ஓம்	ஸுப லக்ஷணாய	நமஹ
84.	ஓம்	ஸௌக்ய தாயினே	நமஹ

85.	ஓம்	ஸௌம்ய சித்தாய	நமஹ
86.	ஓம்	ஸ்வ ப்ரகாசாய	நமஹ
87.	ஓம்	ப்ராஜ்ஞாய	நமஹ
88.	ஓம்	ப்ருஹத் பானவே	நமஹ
89.	ஓம்	ப்ரும்ம த்வேஷ விவர்ஜிதாய	நமஹ
90.	ஓம்	ரிஷி வந்த்யாய	நமஹ
91.	ஓம்	ஜயாய	நமஹ
92.	ஓம்	ஜிதேந்திரியாய	நமஹ
93.	ஓம்	கொல்லிகிரி சஞ்சாராய	நமஹ
94.	ஓம்	ராஜீவ லோசநாய	நமஹ
95.	ஓம்	யோகினே	நமஹ
96.	ஓம்	சித்த ஸூத்திகராய	நமஹ
97.	ஓம்	ஸித்தியாய	நமஹ
98.	ஓம்	ஸ்ரீ மதே	நமஹ
99.	ஓம்	தேஜோ ரூபாய	நமஹ
100.	ஓம்	யதி சிருஷ்டி கர்த்ரே	நமஹ
101.	ஓம்	துஷ்ட கர்வ விமோசகாய	நமஹ
102.	ஓம்	சட்டை முனி சிஷ்யனாய	நமஹ
103.	ஓம்	சிவப் பிரபாகர குருவே	நமஹ
104.	ஓம்	ஸூட்சுமாய	நமஹ
105.	ஓம்	ஸூன்யாய	நமஹ
106.	ஓம்	சுந்தர ரூபாய	நமஹ
107.	ஓம்	பாம்பாட்டிச் சித்தனே	நமஹ
108.	ஓம்	மங்கள ப்ரதாய	நமஹ

ஓம் ஸர்வ மங்களம் மந்த்ர நமஹ
புஷ்பம் சமர்ப்பயாமி

9

ஓம் ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் போற்றி 108

ஆக்கம் - அரு. ராமசுந்தரம்

1. ஓம் அரிச்சங்கரன் கோவில் வாசா போற்றி
2. ஓம் அகரத்தை அறிந்த சித்தா போற்றி
3. ஓம் அருவாய் உருவாய் ஆனாய் போற்றி
4. ஓம் அட்ட திக்கும் வென்றாய் போற்றி
5. ஓம் அக்கினியை நீந்திக் கடந்தாய் போற்றி
6. ஓம் அறுபத்தி நான்கு கலைச் செல்வா போற்றி
7. ஓம் அண்டம் எல்லாம் கண்டாய் போற்றி
8. ஓம் அக்கினிக் கோட்டை மேல் துயின்றாய் போற்றி
9. ஓம் அத்திரி முனியின் ஆசி பெற்றோய் போற்றி
10. ஓம் ஆதியும் அந்தமும் ஆனாய் போற்றி
11. ஓம் ஆநிரை மேய்த்த வம்சா போற்றி
12. ஓம் ஆகம வேதப் பொருள் கடந்தோய் போற்றி
13. ஓம் ஆய கலை அனைத்தும் வென்றாய் போற்றி
14. ஓம் ஆதி சேஷ நாயகா போற்றி
15. ஓம் ஆணைப் பெண்ணாய் ஆக்குவாய் போற்றி
16. ஓம் ஆழ்கடல் நீரைக் குடித்தாய் போற்றி
17. ஓம் ஆதி பரா பரயே போற்றி
18. ஓம் ஆதி வத்துவை அறிந்தோய் போற்றி
19. ஓம் ஆகாரப் பாம்பை விரித்தாய் போற்றி
20. ஓம் ஆதி பிரம்மன் ஐவரையும் வென்றவா போற்றி
21. ஓம் ஆனிக் குடத்தில் பாம்பை அடைத்தவா போற்றி
22. ஓம் இறையை வென்ற சித்தே போற்றி
23. ஓம் இமவான் மகள் நேசா போற்றி

24.	ஓம் இந்திரியக் குண்டலிப் பாம்பே	போற்றி
25.	ஓம் ஈஸ்வர சித்த வடிவே	போற்றி
26.	ஓம் உலகைக் காக்கும் உத்தமா	போற்றி
27.	ஓம் உண்மைப் பொருள் ஆனாய்	போற்றி
28.	ஓம் உயிரைப் படைககும் ப்ரம்மமே	போற்றி
29.	ஓம் ஊழ்வினை களையும் புண்ணியா	போற்றி
30.	ஓம் ஊனிலும் உயிரிலும் கலந்தோய்	போற்றி
31.	ஓம் எண் திசை வென்ற ஏந்தலே	போற்றி
32.	ஓம் எவ்வுலகும் சொந்த மென்றாய்	போற்றி
33.	ஓம் ஏழு கடலைக் குடித்தோய்	போற்றி
34.	ஓம் ஐம் பூதமும் அடக்கிய தலைவா	போற்றி
35.	ஓம் தச நாடி வெஃற தவமே	போற்றி
36.	ஓம் தமனிய சித்தர் கணமே	போற்றி
37.	ஓம் திருவாய் குருவாய் நின்றாய்	போற்றி
38.	ஓம் திருமால் குடையாய் ஆனாய்	போற்றி
39.	ஓம் தூய பரிசுத்தப் பொருளே	போற்றி
40.	ஓம் சத்ரு நாச ரூபா	போற்றி
41.	ஓம் சந்திரனைத் தீண்டும் பாம்பே	போற்றி
42.	ஓம் சட்டை முனி சிஷ்யா	போற்றி
43.	ஓம் சங்கரன் கழுத்தில் இருப்பாய்	போற்றி
44.	ஓம் சதுர் வேதம் ஆறும் கடந்தாய்	போற்றி
45.	ஓம் சமய பேதம் கடந்த சத்தியா	போற்றி
46.	ஓம் சகத்தைப் பொய்யென்று தெளிந்தாய்	போற்றி
47.	ஓம் சந்திர மண்டலமும் கடந்தாய்	போற்றி
48.	ஓம் சாதிப் பிரிவை அக்கினியில் இட்டாய்	போற்றி
49.	ஓம் சித்தர்கள் ராஜனே	போற்றி
50.	ஓம் சிவனின் செவியை அலங்கரித்தாய்	போற்றி
51.	ஓம் சூனியம் அறிந்த மதியாய்	போற்றி
52.	ஓம் சூரியனைத் தாவித் தீண்டினாய்	போற்றி
53.	ஓம் சுழுமுனைக் குள்ளே சுகித்திருந்தாய்	போற்றி
54.	ஓம் செங்கதிரைச் சுடும் நெருப்பே	போற்றி
55.	ஓம் கற்ப மருந்து கண்டாய்	போற்றி

56. ஓம் கற்ப காலம் கடந்த கர்த்தா போற்றி
57. ஓம் காற்றைப் புசித்த அதிசயமே போற்றி
58. ஓம் கார்க்கோடக வடிவம் கொண்டாய் போற்றி
59. ஓம் காமப் பால் வென்ற சித்தா போற்றி
60. ஓம் கால காலன் ஆனாய் போற்றி
61. ஓம் காயக் குடத்தில் பாம்பை இட்டவா போற்றி
62. ஓம் கொல்லி மலை வாசா போற்றி
63. ஓம் கோமதி தெய்வப் பிரதிஷ்டா போற்றி
64. ஓம் கோசாயி வம்ச வழியே போற்றி
65. ஓம் மனம், மொழி, மெய் வென்றாய் போற்றி
66. ஓம் மதியென்ற பெரும் படம் விரித்தாய் போற்றி
67. ஓம் மாகாரப் பிறப்பை அறுத்தாய் போற்றி
68. ஓம் மாய பந்தம் கடந்தாய் போற்றி
69. ஓம் பொய்மை மதங்கள் வெறுத்தாய் போற்றி
70. ஓம் பொய்யை அழித்த மெய்யே போற்றி
71. ஓம் வேதம் பலகடந்த வித்தகா போற்றி
72. ஓம் வேத சிருஷ்டி நாயகா போற்றி
73. ஓம் போதப் பொருள் உரைத்தவா போற்றி
74. ஓம் பரா பரமாய் பரிணமித்தாய் போற்றி
75. ஓம் பரகாயப் பிரவேச சித்தா போற்றி
76. ஓம் பரியாசப் பாம்புக் கவியே போற்றி
77. ஓம் பண்ணரிய தவ சீலா போற்றி
78. ஓம் பரகதி ஞான சொரூபா போற்றி
79. ஓம் பத்தெட்டு மூன்று படி கடந்தாய் போற்றி
80. ஓம் பதினெண் சித்தர் இளவலே போற்றி
81. ஓம் பார்வதிக்குக்கங்கண மானாய் போற்றி
82. ஓம் பிறப்பும், இறப்பும் வென்றோய் போற்றி
83. ஓம் பிரபாகரர் குருவாய் வந்தாய் போற்றி
84. ஓம் புலன் ஐந்தும் கொன்றாய் போற்றி
85. ஓம் பூலோகக் கடலை வென்றாய் போற்றி
86. ஓம் நடுவனை வென்ற கூத்தா போற்றி
87. ஓம் நாதர் முடியில் நாகம் கண்டாய் போற்றி

88. ஓம் ஜகத்தைக் கரத்தால் மறைத்தாய் போற்றி
89. ஓம் மும்மூர்த்தி நிலையும் கடந்தாய் போற்றி
90. ஓம் மூலப் பொருளானாய் போற்றி
91. ஓம் மூவுலகும் வென்ற மூர்த்தியே போற்றி
92. ஓம் மெய் ஞானம் கண்ட சித்தா போற்றி
93. ஓம் மெய்ப் பொருள் தத்துவ வித்தகா போற்றி
94. ஓம் வாசுகியாய்ப் பாற்கடல் கடைந்தாய் போற்றி
95. ஓம் வாசியை உணவாய் உண்டாய் போற்றி
96. ஓம் வா சிவா என்றானாய் போற்றி
97. ஓம் நாற்பத்து முக்கோண நிலையே போற்றி
98. ஓம் நித்ய மூர்த்தியாய் நின்றாய் போற்றி
99. ஓம் நேயச் சுழுமுனை மருத்துவம் தந்தாய் போற்றி
100. ஓம் மிருக சீருஷ நட்சத்திரா போற்றி
101. ஓம் கார்த்திகை மாதம் பிறந்தாய் போற்றி
102. ஓம் தொடக்கமும் முடிவும் ஆனாய் போற்றி
103. ஓம் தீந்தமிழ் செப்பிய சித்தா போற்றி
104. ஓம் மனம் போல் வாழ்வெனச்சொன்னாய் போற்றி
105. ஓம் அடியும் முடியுமானாய் போற்றி
106. ஓம் அட்டமா சித்தி பெற்றாய் போற்றி
107. ஓம் பாம்பாட்டியெனும் சித்தனே போற்றி
108. ஓம் ஸர்வ மங்கள மானாய் போற்றி

ஓம் ஸர்வ மங்கள மந்த்ர
புஷ்பம் சமர்ப்ப யா மி

10

பதினெண் சித்தர் தாலாட்டு

பாவாக்கம் பிரபாகரதாசன்

கண்ணே ஆராரோ ஆரிராரோ
கற்கண்டுத் தமிழ் தந்த
அகத்தியர் குல விளக்கே
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே ...)

தென் பொதிகைச் சந்தனமே
கண்ணே ஆராரோ ஆரிராரோ
தெவிட்டாக் கொல்லி மலைத்தேனே
கண்ணே ஆராரோ ஆரிராரோ
செம் மாந்த பேரழகே
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

அத்திரி மழைக் காற்றே
அழகான குற்றால நீருற்றே
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

பதினெட்டு சித்தர் குலப்
படி ஏறி வந்தவனே
கண்ணே ஆராரோ ஆரிராரோ (கண்ணே)

என் வயித்தில் நீ பிறக்க
ஆத்தா என்ன தவம் செய்தேனோ
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

குல விளக்கே உன்னைப் பெற்றெடுக்க
ஆத்தா கோடித் தவ மிருந்தேனடா
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

கோ மகனைப் பெற்றெடுக்க
கோவில் பல சுற்றிவந்தேன்
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

நல்ல பிள்ளை நான் பெறவே
நவ நாயகரை நாடித் தவமிருந்தேன்
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

நடையாய் நடை நடந்து
நடராஜன் பதம் பணிந்து
நல்ல பிள்ளை பிறப்பதற்கு
மெல்ல வரம் கேட்டேனடா
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

தேடித் தவம் இருந்து
தேவியரைக் கும்பிட்டு மாதா
தேவையினைச் சொல்லி வைத்தேன்
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

பாடித் தவம் இருந்து
பாலகனைப் பெற்றெடுக்க
பர மண்டல ஏசுவிடம்
பாகாய் உருகி நின்றேன்
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

கூடித் தவம் இருந்து
குல மகனைப் பெற்றெடுக்க
அல்லாஹூ அக்பர் என்று
கூவி அழைத் திட்டேன்
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

கோடித் தெய்வங்களை நான்
கும்பிட்டுத் தொழு தாலும்
மாதா கருப் பையில்
மகனே நீ குடியேற
மாசம் பல ஆச்சுதடா
கண்ணே ஆராரோ ஆரிராரோ (கண்ணே)

நாளும் பல செல்கையிலே
நங்கை உடல் சுணங்கையிலே
தேனும் தினை மாவுமுண்டு
தேகம் இளைப் பாற
சற்றே தலை சாய்த்தேனடா
கண்ணே ஆராரோ ஆரிராரோ (கண்ணே)

அம்மா கண் மூடித்
தூங்கையிலே ஒரு சோதி
தெரிந்ததடா ஆராரோ ஆரிராரோ (கண்ணே)

அச்சோதி வழிகாட்ட
கண் விழித்த ஆத்தா
கண்டேனடா அங்கு நம்ம
பாம்பாட்டிச் சித்தர் சமாதியை
கண்ணே ஆராரோ ஆரிராரோ (கண்ணே)

பக்திப் பர வசமாய்

பாம்பாட்டிச் சித்தர் முன்னே
பாலகனை நான் வேண்டிப்
பதினெட்டு ஜோதி விளக்கேற்ற
பத்தரை மாற்றுப் பொன்னாய்
நீயும் பிறந் தாயடா
கண்ணே ஆராரோ ஆரிராரோ (கண்ணே)

தாத்தா திரு மூலன்
தங்க மணிக் கரத்தாலே
தமிழெடுத்துத் தந்தனால் தம்பி
செந் தமிழில் தாலாட்டு
நான் பாட நீயும்
தேம்பி அழு தாயோ
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

ஏழு மலை தாண்டி
உன் அருமைப் பெரியப்பா
ஏழு மலை யானின்
புகழ் பரப்பித் திரிகின்றார்
ஏங்கி நீ அழுது
கொங்கணவா என்றே கூவி
அழைத்தாலும் வருவாரோ உன்
அழகுப் பெரியப்பா
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

கூடும் கூட்ட மெல்லாம்
அவர் தாண்டி வருவதற்குள்
உன் குரலும் வற்றிவிடும்
கோமகனே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

கண்ணன் அழுகைக் குரல் கேட்டு
கண் விழித்த ஜோதி ரங்க
சட்ட முனி சித்தப்பா தன்
கையில் பூங் கோல் எடுத்து
கண் மணியை மிரட்ட வருவதனால்
கண் மூடித் தூங்கி விடு
கண்ணே ஆராரோ ஆரி ராரோ

(கண்ணே)

உன் அருமைத் தாய் மாமன்
தஞ்சை நகர் கரு வூரார்
தங்கப் பூந் தொட்டில் கொண்டு
தம்பிக்குத் தாலாட்டு சீர் செய்ய
நாற் படையோடு வரு வதனால்
பவள வாயில் புன்னகையைப் பூக்கவிடு
கண் மணியே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

தாத்தா வால்மீக மாமுனியோ
வானத்து மீன் பறித்து
வண்ண மலர் மாலைகட்டி
வடி வேலன் கழுத்தில் சூட
எட்டிக் குடி விட்டு
தள்ளாடி வரு கின்றார்
தள்ளாடும் நடையைக் கண்டு

தங்கமே பூவாய்ச் சிரித்துவிடு
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

கண்ணான என் காசி நகர்
சித்தப்பா நந்தி தேவ நாயகரோ
தம்பி அழுகைக் குரல் கேட்டு
காவி உடை நீக்கி இரு
கையில் நடை வண்டி தூக்கிக்
கண்மணியைக் காண ரயிலேறி வருகின்றார்
கண்ணே ஆராரோ ஆரி ராரோ

(கண்ணே)

அ ழகாக மூச்சடக்கி
ஆழக் கடலுக்குள் சென்று
பெருந் தனத்துப் பாலடக்கும்
பெருத்த நற் சங்கெடுத்து
தங்கத்தில் தோய்த் தெடுத்து
தங்கச் சங் காக்கி
உன்வைர இதழ் பதித்து
நல்லமுதப் பால் ஊட்ட
என் பெரியப்பா மச்சமுனி
பரங் குன்றை விட்டுப்
பறதோடிவருவதனால்
பாராளும் குலக் கொழுந்தே

பன்னீராய் வழிந் தோடும்
உன் கண்ணீரை நிறுத்திவிடு
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

அம்புலியைக் காட்டி சோறூட்ட
அத்தையவள் மணி வயித்தில்
முத்தான பெண் வேண்டி
கால்நடையாய் ராமேஸ்வரம் சென்றிட்ட
கஞ்ச மாமன் பதஞ்சலியோ
மாப்பிள்ளை அழுகைக் குரல்கேட்டு
காசைப் பாராது நம்ம
மருது பாண்டியர் மோட்டார்
வாகனத்தில் மல்லாந்து வருகின்றார்.
கல் கோனா உருண்டையுடன்
மாமன் வரும்போது மாப்பிள்ளை
அழலாமோ ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

தேம்பி அழுகின்ற தங்கத்
தம்பி அழுகையினை நிப்பாட்ட
இளைய தாய் மாமன்
சங்கை நகர் பாம்பாட்டி
பாம்பை பிடித்து வந்து
பம்பரத்து சாட்டை யாக்கி

பல வித்தை காட்டுகிறான்
அவன் தேகம் சுணங்குமுன்
ஆருயிரே அழுகையினை நிறுத்திவிடு
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

பரம் பரை வைத்தியராம்
பழனி மலைப் போகருக்கு
உன் அழுகை எட்டியதால்
பச்சிலைச் செடியோடு
பாடாய் உனைப் படுத்த
பறந்தோடி வருகின்றார் மயில்மீது
பாலகனே அவர் வருவதற்குள்
சமத்தாய் உறங்கி விடு
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

தம்பி அழுத கண்ணீர்
தகப்பன் படுக்கை தாண்டி
தாய்மாமன் காவல் தாண்டி
தாளாத வேகத்துடன் என்
தங்கை வீட்டிற்குள் செல்ல
தரமான வைத்தி யராம்
தன் வந்த்ரி சித்தப்பாவும்
தம்பி அழுகையினை நிப்பாட்ட

வைத்தீஸன் கோவில் திருசாந்தெடுத்து
வைத்தியமும் செய்ய வருவதனால்
அழுகை போதுமடா என்
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

தேம்பி அழுகின்ற தம்பி
சங்கீதக் குரல் கேட்டு
சமாதி அடைந்திட்ட நம்ம
சொந்த பந்தம் எல்லாரும்
தேகம் சிலிர்த் தேர்ங்க
வேக நடை போட்டு
இடைக் காடர் தலைமையிலே
கமலமுனி சுந்த ரானந்தரோடு
ராமதேவர் பாட்டிசைக்க
கோரக்கர் குதம்பர் பின்தொடர
கோமகனைக் காண ஓடோடி
வருகின்றார் ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

உன் அழுகைக் குரல் கேட்டு
நம் அரிசுவடி சித்தராஜ வாத்தியாரும்
கருங் கூந்தல் கொண்டை இட்டு
கையில் பூங் கோல் எடுத்து
பையில் ஓலைச் சுவடிபல அடக்கி

பாலகனே உனை மிரட்ட பையவே
நுழைகின்றார் கண்ணே ஆராரோ ஆரிராரோ
(கண்ணே)

நம் வாத்தியாரின் பெருமைகளை
வரிசை இட்டுச் சொல்வதென்றால்
தமிழில் வார்த்தைகளே இல்லை
கண்ணே ஆராரோ ஆரிராரோ
(கண்ணே)

தரமான தமிழ் கற்றுத்
தரணி எங்கும் புகழடைய
உன் தாத்தா திருமூலர்
நம்ம வாத்தியாரிடம் சென்றிட்டார்
ஓராண்டும் படித் திட்டார்
ஒரு வார்த்தை தமிழில்லை
மலையாளம் தான் ஏராளம்-தமிழ்
மழலைப் பேச்சு தாராளம்
கண்ணே ஆராரோ ஆரிராரோ
(கண்ணே)

நாத்தியின் திருக் கணவர்
உன் மாமன் பதஞ்சலியோ
நாலும் தெரிந்தவர் போல்
நடித்ததனால் இவரிடத்தில் சிக்காமல்
தப்பித்தார் ஆராரோ ஆரிராரோ (கண்ணே)

இப்படியே சொல்வதென்றால்
இவரைப் பற்றி ஏராளம்
சொல்லலாம் கையில் கோலூடனே
வாத்தியாரும் எனை முறைப்பதனால்
கண்மணியே உனை எண்ணி
நாவடக்கி நிற் கின்றேன்.
கண்ணே ஆராரோ ஆரிராரோ

(கண்ணே)

வாத்தியாரும் வாய் திறந்து
பிரபாகரா என்று அழைத்தவுடன்
வண்ண மணிக் கண் சிரிக்க
வயிர மணிக் கால் அசைத்து
தங்க மணிக் கரம் குவிய
தாமரை இதழ் தேன் சொரிய்
பூ மகளின் மேல் நின்று
பகலவனின் திசை தொழுது
பரதமும் ஆடுகின்ற என் அழகுப்
பெட்டகமே ஆராரோ ஆரி ராரோ.

(கண்ணே)

தன்னிலை விளக்கம்

தாலாட்டுக்குப் பெயர் பெற்ற நம் தங்கத் தமிழ்த் திருநாட்டில் எத்தனையோ வகைகளில் நம் தாய்மார்களால் பட்டி தொட்டி எங்கும் பலவிதமான தாலாட்டுகள் தொன்று தொட்டுப் பாடப்பட்டு வருகின்றன. அவையாவும் கல்விக்கூடம் கண்டிராத நம் கிராமத்துத் தாய்மார்களால் மிகுந்த கருத்துடன்,

நயம் மிகுந்த சொற்களால் புனையப்பட்டவை ஆகும். அப்படிப்பட்டத் தாலாட்டுப் பாட்டுக்களை அடிப்படை யாகக் கொண்டு சற்று வித்தியாசமான முறையில் " சித்தர் தாலாட்டு" என்ற தலைப்பின் கீழ் இதனைத் தந்துள்ளேன். இந்தத் தாலாட்டு எழுத என்னைத் தூண்டியவர்கள் இருபெருமக்கள் ஆவார்கள். அவர்கள் இருவருமே பாம்பாட்டிச் சித்தரின் பக்தர்கள் ஆவார்கள். ஒரு பக்தர் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு இந்தத் தாலாட்டை முதலில் படித்து இன்புற வேண்டும் என்ற அவாவில் உள்ளார். இன்னொரு பக்தரோ தனது பேரனுக்கு இந்தத் தாலாட்டைப் பாட வேண்டும் என்ற ஆவலில் என்னை எழுதத் தூண்டினார்கள். இரு பக்தர் களுமே இனிவரும் சந்ததியருக்கு சித்தர்தாலாட்டைப் பாடிக் காண்பித்து இன்புற வேண்டும் என்ற ஆசைப் பட்ட காரணத்தால் நான் இந்தத் தாலாட்டை எழுதத் துணிந்தேன். அதற்கு சற்குருநாதன் பாம்பாட்டிச் சித்தரும், அவரது சீடர் பிரமானந்த ஸ்ரீ சிவப் பிரபாகர சித்தயோகியும், எனது குருநாதர் பிரம்மஸ்ரீ சித்தராஜ சுவாமிகள் ஆசியும் பரிபூரணமாக இருந்த காரணத்தால் இதனை என்னால் இயன்ற அளவு பிழையற எழுதிமுடித்துள்ளேன். இதில், அதையும் மீறிப் பிழைகள் ஏதாவது இருந்தால் பதினெட்டுச் சித்தர்களும் என்னை மன்னித்து அருளுமாறு வேணடுகிறேன். இதில் கற்பனைக்காகவும், ரசனைக்

காகவும், எனது குருநாதரை தமிழ் சரியாகப் பேச வராத வாத்தியார் என்று புனைந்துள்ளேன். உண்மையில் அவர் தமிழை மிக நன்றாகப் புரிந்து சரியாகப் பேசக் கூடியவர். எனது. கற்பனையை பெரிய மனதுடன் அவர் ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கையிலே மேற்படி செயலைச் செய்துள்ளேன். தவறு ஏதாவது இருந்தால் அவரது பொற்பாதங்களில் வீழ்ந்து மன்னிப்பும் வேண்டுகிறேன். பதினெட்டுச் சித்தர்களும் இந்தத் தாலாட்டைக் கேட்டு ரசிக்க என் அன்னை ஸ்ரீ முத்துமாரி துணை செய்வாள் என்ற பரிபூரண நம்பிக்கையும் எனக்கு உள்ளது.

இப்படிக்கு
பிரபாகரதாசன்
காரைக்குடி.

13. பதினெண் சித்தர்கள் அட்டவணை

நன்றி : 5.6.95 கோவை ஞான சிந்தாமணி மருத்துவ மாநாடு சிறப்பு மலரிலிருந்து..

	பெயர்	பிறந்த மாதம்	நட்சத்திரம்	வாழ்ந்த காலம்	சித்தியான ஸ்தலம்
1.	ஸ்ரீபதஞ்சலி	பங்குனி	மூலம்	5 யுகம், 7 நாள்	இராமேஸ்வரம்
2.	ஸ்ரீஅகஸ்தியர்	மார்கழி	ஆயில்யம்	4 யுகம், 48 நாள்	திருவனந்தபுரம்
3.	ஸ்ரீகமலமுனி	வைகாசி	பூசம்	4000 ஆண்டு, 48நாள்	திருவாரூர்
4.	ஸ்ரீதிருமூலர்	புரட்டாசி	அவிட்டம்	3000 ஆண்டு, 13 நாள்	சிதம்பரம்
5.	ஸ்ரீகுதம்பை	ஆடி	விசாகம்	1800 ஆண்டு, 16 நாள்	மாயவரம்
6.	ஸ்ரீகோரக்கர்	கார்த்திகை	ஆயில்யம்	880 ஆண்டு, 11 நாள்	பேரூர்
7.	ஸ்ரீதன்வந்திரி	ஐப்பசி	புனர்பூசம்	800 ஆண்டு, 32 நாள்	வைத்தீஸ்வரன்கோவில்
8.	ஸ்ரீசுந்தரானந்தர்	ஆவணி	ரேவதி	800 ஆண்டு, 28 நாள்	மதுரை
9.	ஸ்ரீகொங்கணர்	சித்திரை	உத்திராடம்	800 ஆண்டு, 16 நாள்	திருப்பதி
10.	ஸ்ரீசட்டமுனி	ஆவணி	மிருகசீருஷம்	800 ஆண்டு, 14 நாள்	திருவரங்கம்
11.	ஸ்ரீவான்மீகர்	புரட்டாசி	அனுஷம்	700 ஆண்டு, 32 நாள்	எட்டிக்குடி
12.	ஸ்ரீராமதேவர்	மாசி	பூரம்	700 ஆண்டு, 6 நாள்	அழகர்மலை
13.	ஸ்ரீநந்தீஸ்வரர்	வைகாசி	விசாகம்	700 ஆண்டு, 3 நாள்	காசி
14.	ஸ்ரீஇடைக்காடார்	புரட்டாசி	திருவாதிரை	600 ஆண்டு, 18 நாள்	திருவண்ணாமலை
15.	ஸ்ரீமச்சமுனி	ஆடி	ரோகிணி	300 ஆண்டு, 62 நாள்	திருப்பரங்குன்றம்
16.	ஸ்ரீகருவூரார்	சித்திரை	ஹஸ்தம்	300 ஆண்டு, 42 நாள்	கருவூர்
17.	ஸ்ரீபோகர்	வைகாசி	பரணி	300 ஆண்டு, 18 நாள்	பழனி-தில்லை
18.	ஸ்ரீபாம்பாட்டி	கார்த்திகை	மிருகசீருஷம்	123 ஆண்டு, 4 நாள்	சங்கரன்கோவில்

12

ஏ மனமே

1. சற்குருவிடம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்தால் அவரிடத்தில் ஆச்சரியமான சக்தியைக் காணலாம்

2. கடுகளவு காமம் உன்னிடம் இருந்தாலும், நீ கடவுளைக் காண்பது அரிது.

3. நீ பிறரை வெறுத்தால் உன்னைத் தெய்வமும் வெறுத்துவிடும்.

4. இந்த உலகத்தை எப்போதும் நாடகமாகப் பார்த்து வா! அப்போது தான் உன்னிடமுள்ள கெட்ட புத்தி ஒழிந்து அனைவரும் நல்லவர்களாகத் தோன்றுவர்.

5. முதலில் உன்னை யாரென்று அறிந்து கொள். அதன் பிறகு பிறரை யாரென்று சிந்திக்கலாம்.

6. எமன் எப்போதும் உன்னுடனே இருக்கின்றான் என நினைத்து உடனடியாகத் தர்மத்தை செய்.

7. செயற்கரிய செயல்களைச் செய்வதற்காகவே நீ பிறந்திருக்கிறாய் என்பதனை எப்போதும் மறவாதே

8. சுகம் என்பது உனக்குள்ளேயே இருக்கிறது, வெளியே இல்லை என்பதை உறுதியாக நம்பு.

9. உன்னை நீ அறிந்து கொள்ள வேண்டு மென்றால் தியாகமும், தியானமும் செய்

10. அன்பு மதம் ஒன்றுதான் உலகில் உண்மை யான மதம் என்பதை மறவாதே

11. கடவுளை நினைத்துக் காரியம் செய்தால் நீயும் கடவுளாவாய். கழுதையை நினைத்துக் காரியம் செய்தால் நீ கழுதை ஆகிவிடுவாய் என்பதனை மறவாதே

12. பிறரைக் கெடுக்க நினைத்தால் கூடிய சீக்கிரம் நீ கெட்டு விடுவாய் என்பதனை மறந்து விடாதே

13. நீ அன்பு மயமாகி விட்டால் உன்னை எந்த ஆபத்தும் அண்டாது.

14. எப்போதும் உழைத்துக் கொண்டே இரு. பலன் தானாக வந்து சேரும்.

15. பற்றற்று இருப்பாய் எனில் பகவான் உன்னைத் தேடி வருவார்.

16. ஆசை என்ற மிகக் கொடிய புற்று நோய்க்கு எப்போதும் உடன்பட்டு விடாதே. அது உன்னை மரணத்திற்கு இட்டுச் செல்லும்.

17. செய் நன்றியை எப்போது நீ மறக்கிறாயோ அப்போதே செத்தவனாகி விடுகின்றாய்.

18. அடுத்தவர்களிடம், குறையும் குற்றமும் காண்பதை உடனடியாக மறந்துவிடு.

19. முடிந்தளவு நன்மையினைச் செய்! முடியா விட்டால் நன்மை செய்பவர்களுக்கு வழி விட்டு ஒதுங்கி விடு.

20. சலனமற்ற தன்மையுடன் எப்போதும் இரு!

21. சத்தியத்தைக் கடைபிடி. ஆனால் சத்திய வான் நானென்று இறுமாப்புக் கொள்ளாதே

22. நீ செய்யக்கூடிய பாவங்கள் ஒவ்வொன் றிற்கும் இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் தண்டனை கிடைக்கும் என்பதை மறந்து விடாதே.

23. தெய்வத்திற்குத் தொண்டு செய்யக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இகழ்ந்து பேசி விடாதே. அவ்வாறு செய்தாயே யானால் மரணத்திற்கு வெகு அருகில் நீ வந்து விட்டாய் என்று அர்த்தம்.

24. பெண்கள் அனைவரையும் நீ தெய்வமாக மதித்தால், பெரும் புகழ் உன்னைத் தேடி வந்தடையும்.

25. உழைப்பவனை மதிக்கக் கற்றுக்கொள்.

உண்மையின் வழி நிற்கக் கற்றுக் கொள்.

ஆக்கம் அரு. தமிழினியன்

நூல் வெளியீட்டுக்கு நிதி உதவி செய்த பெருமக்கள்

1.	திரு. ப.ராமசாமி செட்டியார் சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்	மதுரை
2.	திரு. N.பட்டாபி செட்டியார் தயாள் ஜூவல்லரி	தேனி
3.	திரு. M.நடராஜ பிள்ளை	மதுரை
4.	திரு. N.S.பரமானந்தம்	மதுரை
5.	V.வெள்ளைத்துரை பாண்டியன் (எ) அரிசிக்கடை பாண்டியன்	சென்னை
6.	R.ராமராஜ் பொன்மணி E.R.	அருப்புக்கோட்டை
7.	ராம குணசேகரன் - மாலா	மதுரை
8.	M.மீனாட்சி சுந்தரம்- விஜயாள்	மதுரை
9.	A.ராஜேஸ்வரன் - ரதி	மதுரை
10.	திரு. M.பால்ராஜ் - செல்வி	கோயம்புத்தூர்
11.	திரு. சோமசுந்தரம்	மதுரை
12.	திரு. R.ஆனிமுத்து ஆசாரி	மதுரை
13.	திரு மாரியப்ப செட்டியார்	மதுரை
14.	திரு. S.பாண்டியன்	மதுரை
15.	திரு. N. வேலுச்சாமி	அருப்புக்கோட்டை
16.	திரு. J.P.நாராயணன்	மதுரை
17.	திரு. கிரிதரன்	மதுரை
18.	திரு. S.கலைவாணன்	வெள்ளலூர்
19.	திரு. P.முப்பிடாதி	சங்கரன்கோவில்
20.	திரு. V.ராஜேந்திரன் D.E.	சங்கரன்கோவில்
21.	திரு.அருணகிரி	சங்கரன்கோவில்
22.	திரு. ஜெகநாதன்	சங்கரன்கோவில்
23.	திரு. S.சந்திரன்	இருமன்குளம்
24.	திரு.பெரியசாமி தலைவர்	வெங்கடாசலபுரம்
25.	திரு. K.முருகன்	சுப்பையாபுரம்
26.	திரு. S. சீனிவாசன்	பெரும்பத்தூர்

27. திரு. K.A.R. ஐயப்ப சாமி மேசியாபுரம்
28. டாக்டர் S.சங்கரநாராயணன் ஸ்ரீவில்லிப்புத்தூர்
29. திருமதி. அனுசுயாசங்கரநாராயணன் ஸ்ரீவில்லிப்புத்தூர்
30. திரு. P.சர்வேஸ்வரன் சேலம்
31. திரு. பாஸ்கரன் B.E., அருப்புக்கோட்டை
32. திரு. S.சங்கர பாண்டியன் அருப்புக்கோட்டை
33. திரு. T.M.மாணிக்கம்-காமேஸ்வரி அருப்புக்கோட்டை
34. திரு. இர்ாமச்சந்திரன் - ராஜேஸ்வரி அருப்புக்கோட்டை
35. திரு. M.சக்கரவர்த்தி-ரத்தினா அருப்புக்கோட்டை
36. திரு. U.பாஸ்கரன் அருப்புக்கோட்டை
37. திரு. V.பிரகாஷ் - தமிழ்ச்செல்வி அருப்புக்கோட்டை
38. திரு லட்சுமணசாமி-ரஞ்சிதம் அருப்புக்கோட்டை
39. திரு. வைகுண்ட நாம மணி காயல்பட்டிணம்
40. திரு. S.ரவி சங்கர் - கல்யாணசுந்தரி சிவகங்கை
41. திரு. V.K.பாலசுப்ரமண்யம் காரைக்குடி
42. திரு. Dr.K. மணிமாறன் பந்தளம்
43. திரு. T.S.செந்தில்வேல் திருச்செந்தூர்
44. R. சசிரேகா அருப்புக்கோட்டை
45. திருமதி R. சவுண்டம்மாள் டீச்சர் அருப்புக்கோட்டை
46. திருமதி. J. முத்துமீனாள் அருப்புக்கோட்டை
47. M. கார்த்திகேயன் ஸ்ரீசுந்தரம் டெக்ஸ் கும்பகோணம்
48. M. முத்துக்குமார் சென்னை
49. S.R. ராஜகோபால் சென்னை
50. S.N.G. ராஜேஸ்வரி சீனிவாசன் அருப்புக்கோட்டை

மேற்கண்ட பெருமக்கள் அனைவருக்கும் பாம்பாட்டிச் சித்தர் சமாதி சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

பாம்பாட்டிச் சித்தர் சமாதி பீடத்தின் துணை நிர்வாகியின் வேண்டுகோள்

சங்கரன்கோவில் ஸ்ரீபாம்பாட்டிச் சிதத்ர் சமாதி பீடத்தில் தற்போது அவரவர் பெயருக்கு ஜென்மநக்ஷத்திர / பிறந்த நாள் அபிஷேக பூசை நடத்தப்படுகின்றது. அவரவர் பெயரில் ஒவ்வொரு வருடமும் மேற்படி பூஜை நடத்தப்பட்டு பிரசாதம் அவர்களுடைய விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றது. இதற்கு கட்டணமாக ரூ. 1008/- (ரூபாய் ஆயிரத்தெட்டு மட்டும்) பெறப்பட்டு மேற்படி பணம் நிரந்தர வைப்பு நிதியாக்கப்படுகின்றது. எனவே மேற்படி பூஜையில் அனைவரும் பங்கு கொண்டு சித்தரின் பேரருளைப் பெற வேண்டுகிறோம்.

இராமானுஜம் சுவாமிகள்
பாம்பாட்டிச் சித்தர் சமாதி
பீடத்தின் துணை நிர்வாகி
சங்கரன்கோவில்

விரைவில் வெளி வர இருக்கும் எமது அடுத்த வெளியீடு

அதிசயங்களும், அற்புதங்களும் நிறைந்த ஓர் படைப்பு

ஓம் பிரம்மானந்த ஶ்ரீசிவப்பிரபாகர சித்தயோகி பரமஹம்ஸர் ஜீவ சரித்திரம்

பகுதி - 1

விலை ரூ. 25.00

நூலைப் பற்றிய அறிமுகம்

1. இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சித்தயோகியான ஶ்ரீசிவப்பிரபாகரர் செய்த அதிசயங்கள், அற்புதங்கள், சித்துகள் பற்றிய பக்தர்களின் மெய்சிலிர்க்க வைக்கும் நேரடி அனுபவங்கள்
2. ஶ்ரீசிவப்பிரபாகர சுவாமிகள் 724 ஆண்டு காலம் வாழ்ந்து ஜீவ சமாதியானதற்குரிய சான்றுகள்
3. ஶ்ரீசிவப்பிரபாகர சித்தயோகி பிறந்த அகவூர் மனைபற்றியும், பன்னிரு குலத்தில் பிறந்த திருவள்ளுவர், சாத்தன் பற்றியும் அதிசயமான குறிப்புகள்.
4. தங்கப் பசுவை உயிருள்ள பசுவாக மாற்றிய திருமேனியின் அதீத சக்தி பற்றிய செய்திகள்

5. கோசாயி என்ற பாம்பாட்டிச் சித்தருக்கும் ஸ்ரீசிவப்பிரபாகர சித்தயோகிக்கும் இடையே உள்ள குரு-சிஷ்ய தொடர்பு பற்றிய ஆதாரங்கள்
6. பன்னிரு குலத்தாரின் ஓச்சிரா விளக்கு திருவிழா பற்றிய விளக்கங்கள்
7. 06.04.1986ல் தனது 724வது வயதில் (ஜனன நட்சத்திரத்தன்று) ஸ்ரீசிவப்பிரபாகர சித்தயோகி ஜீவ சமாதியானபோது நடந்த மிகப் பெரும் புகைப்பட ஆதாரத்துடன் கூடிய அற்புதங்கள்.
8. நூறு வருடங்கள் கடலுக்கு அடியில் இருந்து கடல் மனிதனாக மாறி 1933ல் கொச்சி அரபிக் கடலில் கம்பு வலையில் மீனாகக் காட்சியளித்த ஸ்ரீபிரபாகர சித்தயோகின் அற்புதங்கள் பற்றிய கட்டுரைகள்
9. கடல் மனிதரான சாமிகள் மட்டாஞ்சேரி போலீஸ் ஸ்டேஷனில் 41 நாட்கள் அடைத்து வைக்கப்பட்டபோது நடத்திய சித்துகள் மற்றும் திவான் சர்.சி.பி. ராமசாமியிடம் தனது பெயர் பிரம்மானந்த ஸ்ரீசிவப்பிரபாகர சித்தயோகி பரமஹம்ஸர் என்று எழுதிக் காட்டிய ஆதாரத்துடன் கூடிய மலையாள பத்திரிக்கைச் செய்திகள்
10. பனி மனித சந்ததியை உருவாக்கிய சுவாமிகளின் அதீத சக்தி பற்றிய தொகுப்புகள்

11. ஸ்ரீபிரபாகரரின் அருள் கடாட்சத்தால் உயர்ந்த மாதா அமிர்தானந்தமயி தேவியைப் பற்றி ஆச்சரியமான செய்தி.
12. இந்திரனுக்கு ஈடான பெருமையுடைய ஸ்ரீபிரபாகரரின் தாய்வீடான ஆழ்வாஞ்சேரி மடத்தைப் (சாமுத்திரி குடும்பம்) பற்றியும் திருவள்ளுவர் அண்ணன் அக்னி கோத்ரியைப் பற்றியும் தெளிவான விளக்கங்கள்
13. பல்வேறு இடங்களில் ஜீவ சமாதியாகிய சாமிகளின் சமாதி பற்றிய கண்ணோட்டங்கள் இன்னும் ஏராளமான செய்திகளுடனும் தகுந்த ஆதாரங்களுடனும் வெளி வரவிருக்கும் இந்நூலை வாங்கிப் படித்து பயன் பெறுவீர்.

அருள்மிகு பாம்பாட்டிச் சித்தர் சமாதி பீடத்தின் வளர்ச்சிப் பணிகளும், எதிர்காலத் திட்டங்களும்

1. சாதி, மத இன பேதமில்லா பதினெண் சித்தர் வம்சத்தைச் சேர்ந்த கடைச் சித்தரான அருள்மிகு பாம்பாட்டிச் சித்தர் ஜீவசமாதி அடைந்துள்ள புன்னைவனம் என்ற (15 புளியங்குடி ரோடு) இடம் தற்போது புதுப் பொலிவுடன் வளர்ச்சி பெற்று வருகின்றது.

2. சமாதி பீட வளாகத்தின் முகப்பில் வடக்குத் திசை நோக்கி அருள்மிகு பாலமுருகன், மற்றும் அருள்மிகு வினை தீர்க்கும் விநாயகருக்கு தனி சன்னதி அமைக்கப்பட்டுள்ளது.

3. இதைத் தொடர்ந்து கோவிந்தப்பேரி தெப்பக்குளத்தின் மேற்குக்கரையில் கிழக்கு நோக்கி தியான அறையும் அதற்கடுத்து அன்னபூரணி சன்னதியும் அமைந்துள்ளது.

4. அன்னபூரணி சன்னதியைத் தொடர்ந்து ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர் ஜீவ சமாதி உள்ளது. மேற்படி சித்தர் ஜீவ சமாதி அடைந்துள்ள கருவறை தற்போது ஓலையால் வேயப்பட்ட கருவறையாகக் காட்சியளிக்கின்றது. இது அறுகோண அமைப்பில் மிகப்பெரிய கற்கட்டிடமாக விரிவாக்கம் செய்யப்படவிருக்கின்றது.

கருவறைக்குத் தெற்கில் சமாதி பீடத்தின் அலுவலகமும், இதைத் தொடர்ந்து சித்த மருத்துவ நோயாளிகள் தங்குவதற்கு இரண்டு அறைகளும்

கட்டப்பட்டுள்ளன. இந்த மூன்று அறைகளுக்கு முன்புறம் உள்ள இடம் விளக்கு பூஜை செய்வதற்குரிய வளாகமாகக் கட்டப்பட்டுள்ளது.

5. கோவிந்தப் பேரி தெப்பக்குளத்தின் தென் கரையில் அன்னதான மண்டபம், சித்த மருத்துவ மையம், குருகுலம், திருமண மண்டபம், போன்றவை கட்டப்பட்டு வருகின்றன

6. கோவிந்தப் பேரி தெப்பக்குளத்தின் கீழ் கரையில் கிழக்குமுகமாக வெற்றி விநாயகர் சன்னதியும் முத்தமிழ் கலையரங்கமும் கட்டப் பட்டுள்ளது. இதற்கு வடக்கில் அருள்மிகு பாம்பாட்டி அம்மன் சன்னதியும் கட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட திருப்பணிகளுக்கும் விசேஷ காலங்களில் நடைபெறும் அன்னதானத்திற்கும் ஏராளமான பொருட்செலவு ஆகி வருகின்ற காரணத்தால் ஒவ்வொரு குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மெய்யன்பர்களும் அவரவர் தகுதிக் கேற்பவும், வருமானத்திற்கேற்பவும், தங்களது ஒரு நாள் ஊதியத்தை நன்கொடையாக கீழ்க்கண்ட முகவரிக்கு டிராப்ட் ஆகவோ, மணியார்டர் ஆகவோ அனுப்பி சித்தரின் பேரருளைப் பெறுமாறு பக்தியுடன் வேண்டுகிறோம்.

முகவரி

மேனேஜிங் டிரஸ்டி

பிரம்மஸ்ரீ சித்தராஜ சுவாமிகள்

பிரம்மானந்த ஸ்ரீசிவப்பிரபாகர சித்தயோகி

பரமஹம்சர் தர்ம டிரஸ்ட்

ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர் பீடம்

15, புளியங்குடி ரோடு,

சங்கரன்கோவில் 627 756

போன் 23131 STD 04636

ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் சேவா சமாஜ் வெளியீடுகள்:-

1. பார்புகழும் பாம்பாட்டிச் சித்தர் வரலாறு :-
விலை ரூ 37.00

2. பகுதி -1: ஓம் பிரம்மானந்த ஸ்ரீசிவப்பிரபாகர சித்தயோகி பரமஹம்ஸர் ஜீவசரித்திரம்
விலை ரூ. 25.00

3. ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் ஸ்ரீசிவப்பிரபாகரர் பஜனைப் பாடல்கள் :-
விலை ரூ.25.00

4. ஸ்ரீ அத்ரி மஹரிஷி ஆஸ்ரம வரலாறு :-
விலை ரூ. 11.00

5. ஸ்ரீபாம்பாட்டிச் சித்தர் அர்ச்சனை
மஹாலக்ஷ்மி அஷ்டோத்திரம்
விலை ரூ. 10.00

நூல்கள் கிடைக்குமிடம் :-

1. அருள்மிகு பாம்பாட்டிச் சித்தர் சமாதி பீடம்
15, புளியங்குடி ரோடு,
சங்கரன் கோவில் - 627756
போன் :- 23131 - STDஎண் - 04636

2. ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் சேவா சமாஜ்
27-அ, வடக்கு சித்திரை வீதி, மதுரை - 1.